# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 14,857 — 1969 ජූනි 6 වැනි සිකුරාදා — 1969.6.6**

14,857 ம் இலக்கம் — 1969 ம் ஆண்டு யூன் மாதம் 6 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேருகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 611 | ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | 634 |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 623 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 630 | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | 635 |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | 634 | நானாவித அறிவித்தல்கள் .. .. | 635 |


## பதவிகள்—வெற்றிடம்

### ''இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்து பொதும் நிபந்தனைகள்''

1. *படிகள்.*—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

2. *கேள்விக்குரிய நிபந்தனைகள்.*—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கரும முறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

3. *நியமன விதிகள்.*—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக் குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சதவீதத்தையோ செலுத்தினும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச்சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்துவீபத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

4. *அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.*—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு 'நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின்' தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றாண்டாகும்.

(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல்வேண்டும்.

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரிசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானிகளில் அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலை கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்மானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1968 ம் ஆண்டு திசெம்பர் மீ 20 ந் உ.

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
பதில் அரசாங்க அழுத்தகன்.

*(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.*

*(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில், பிறவற்றுடன் க. ப. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக் கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத் தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனை யில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடையவேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள் ; அவர்களின் தகுதிகாண்/ சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.*

*குறிப்பு.—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதி லிருந்து விலக்கப் பெறுவர்.*

*5. **வேண்டிய தகைமைகள்.**—விண்ணப்பதாரர் ஒவ்வொரு வரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறை யில் நிரூபிக்கவேண்டும். “இலங்கையர்” என்பவர் வம்சா வழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக விருப்பவராகும்.*

*6. **யுத்தசேவைச் சலுகை.**—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படை களில் முன்பு சேவையாற்றியவர்களும், தீயணைக்கும் படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளைவிட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனு மதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திக திக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர் கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியான தாயுமிருத்தல் வேண்டும்.*

*7. **பிற தேவைகள்.**—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ் வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரி னால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக் கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண் ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் (“ஆ” எனக் குறிப்பிடப் பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாள ருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவை யில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண் ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண் ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந் நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ள னரோ அன்றோ வெனவுங் கூறல் வேண்டும்.*

*(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்தி கள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.*

*(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்த வோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆத ரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகை மையின்மையை உண்டாக்கிவிடும்.*

*(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழை யான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டு பிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீ னம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப் பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப் படுவர்.*

*(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

*8. **தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.**—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலி யவை சம்பளத்துடன் அடங்காது.*

---

**No. A.A. 37/X. 2098/69.**

## கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுத் திணைக்களம்

### கண்காணிக்கும் மின் பொறிஞரின் பதவி

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுத் திணைக்களத்தில் கண்காணிக்கும் மின் பொறிஞரின் பதவிக்கென விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அலுவலகத்திலிருந்து கிடைக்கப்பெறும் அச்சிடப்பட்ட படிவங் களில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு பின்வரும் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் “செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு, த. பெ. இல. 500, கொழும்பு 1” என்ற முகவரியில் வந்து சேரும்படியாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள் : **20.6.1969 ;**
(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : **27.6.1969.**

**குறிப்பு.—(1)** அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அனுப்புமாறு அஞ்சல் மூலம் வேண்டுகோள் விடுப்பவர், தமது முகவரி இடப்பட்ட முத்திரை ஒட்டப்படாத, 9″ × 4″ அளவுக்குக் குறையாத கடித உறையையும் சேர்த்து அனுப்புவதோடு, அபேட்சகராக வரவிருப்பவர் அர சாங்க சேவையில் ஒரு உத்தியோகத்தரா, இல்லையா என்பதையும் தெளிவாகக் காட்டுதல் வேண்டும் ;

**(2)** விண்ணப்பப் படிவம், அல்லது அப்படிவம் தொடர் பான ஒரு கடிதம், அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதம் ஆகிவிட்டது என்ற குற்றச் சாட்டெதுவும் கவனிக்கப்பட மாட்டாது. கடைசி நாள்வரை தங் கள் விண்ணப்பங்களைத் தாமதம் செய்யும் அபேட்ச கர்கள், அத்தாமதத்திற்குத் தாமே பொறுப்பாக இருப்பார்கள் ;

**(3)** வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப் பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற் றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும் பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட கால எல்லைக்குள் அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அர சாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பலாம் ;

**(4) மருத்துவச் சோதனையும், பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டில் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல் நலம் உடையவர்களாக இருக்கிறார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக அங்கீகரிக்கப்பட்ட மருத்து வப் பணியாற்றுபவரிடம் பரீட்சைக்கெனச் செல்லுதல் வேண்டும். அத்தகைய மருத்துவச் சோதனைக் குரிய கட்டணத்தையும், இலங்கைக்குப் பயணம் செய்வதற்கான செலவையும் சம்பந்தப்பட்ட உத்தி யோகத்தர்களே கொடுத்தல் வேண்டும்.

**2. நியமன விதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—பதவி நிரந்தர மானது, அத்துடன் இளைப்பாறு சம்பளமுடையது.

3. **சம்பளமும், படிகளும்.**—இப்பதவிக்கான சம்பள அளவுத் திட்டம் வருமாறு :

வருடமொன்றுக்கு ரூபா 13,800 இல் இருந்து ரூபா 600 வருடாந்த அதிகாரிப்பு மூலம் ரூபா 15,600 வரை உயரும் ;

அரசாங்க ஒழுங்கு விதிகளுக்கேற்ப வாடகைப் படியும், வாழ்க்கைப்படிகளும் கொடுக்கப்படும்.

4. **தேவைப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகள் உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்ட வேண்டும் :—

(அ) சிறந்த பண்பும் உடல் நலமும் உடையவராய் இருத்தல் வேண்டும்;

(ஆ) 1969.6.20 ஆந் திகதியன்று 35 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும். (இவ் வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அரசினர் சேவையில் ஏற்கனவே உள்ளவர்களுக்கு அமையாது)

(இ) (1) (இலண்டன்) மின் பொறிஞர்களின் நிலையத்தைச் சேர்ந்த ஒரு கூட்டு உறுப்பினராக இருப்பதுடன் மின் எஞ்சினியராகக் குறைந்த பட்சம் 10 வருட அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும் ;

(2) பின்வருவனவற்றில் போதுமான அனுபவமுடையவராக இருத்தல் வேண்டும் :—

(அ) உயர் இழுவிசை மின்சாரத்தை அனுப்புதலும், வினியோகித்தலும், 11 கி. வோ. வரையான மின்சார உபநிலையங்கள் ஆகியவை, டி. சி. மின்சார உற்பத்தியும், அதைச் சீராக்கும் முறையும் ;

(ஆ) கட்டடங்களிலும், தொழிற்சாலைகளிலும், வேலைக் களங்களிலும், கப்பல்களிலும் உள்ள சதாரண கம்பி இணைப்புகளும், மின் சாதனங்களும் ;

(இ) மின் சக்தி மூலம் செயலாற்றும் வெவ்வேறு இரக கப்பற் சரக்கைக் கையாளும் சாதனங்களும், நிர்மாண சாதனங்களும் ;

(ஈ) பின்வரும் தொழில்கள் நடைபெறும் ஒரு பெரிய மின் தொழிற்களத்தைக் கொண்டு நடத்துதல் :—

மோட்டர்கள், பிறப்பாக்கிகள் ஆகியவற்றைத் திருப்பிச் சுற்றுதல் உட்பட எல்லா இரக மெஷீன்களையும் பழுது பார்த்தல், மின்கல அடுக்கு மின் பாய்ச்சும் சாதனங்கள் போக்குவரத்து வாகனங்கள், கப்பற் சரக்கைக்கையாளும் சாதனங்கள் ஆகியவற்றில் வெவ்வேறு இரக மின்கல அடுக்குகளை நிறுவுதலும், அவைகளைப் பேணுதலும்.

5. அபேட்சகர்கள் வேண்டப்படும் பொழுது பின்வரும் சாதனங்களில் ஏதேனும் ஒன்றை அல்லது எல்லாவற்றையும் சமர்ப்பித்தல் வேண்டும் —

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**முக்கிய குறிப்பு** : ஞானஸ்நானச் சான்றிதழ்கள், அல்லது உதவிபெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குவிதிக் கோவையின் நோக்கத்துக்கென வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா)

(ஆ) பட்டப் பரீட்சையில் சித்தியடைந்ததற்கான சான்றிதழ், அல்லது மிக உயர்ந்த கல்வித் தராதரப் பத்திரம் ;

(இ) பண்பு பற்றிய இரு சான்றிதழ்கள். இவற்றில் ஒன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருத்தல் வேண்டும் ;

(ஈ) உயர்தொழில் தகைமைச் சான்றிதழ், அல்லது தொழில் நுட்பத் தகைமைச் சான்றிதழ், அல்லது இவ்விரு சான்றிதழ்களும் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைக்கான சான்றிதழ்.

**குறிப்பு.**—(1) இவ் விண்ணப்பப் படிவத்துடன் சாதனங்கள், அல்லது சாதனங்களின் பிரதிகள் இணைக்கப்படக் கூடாது ;

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படும் பொழுது அவ்விதஞ் செய்யாமல் இருக்கும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலிருக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். எனினும் தங்கள் விண்ணப்பங்கள் தங்களினால் அனுப்பப்பட்ட திகதியை அவர்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு முடிவுத் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும்படி நேராக அனுப்புதல் வேண்டும். இத்தேவைக்கென, விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்பட்ட (" ஆ " எனக் குறியிடப்பட்ட) அச்சிட்ட அஞ்சல் அட்டையை உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களும் அவை சம்பந்தமான வேறேதும் கடிதத் தொடர்புகளும் அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயளாலரின் முகவரிக்கே அனுப்பப்படுதல் வேண்டும். அவைகளை இத்திணைக்கள உத்தியோகத்தர் எவருக்காவது அவரின் சொந்தப் பெயருக்கு அனுப்புதல் கூடாது.

8. இந்த வர்தமானப் பத்திரிகையின் I ஆம் பகுதி II ஆம் தொகுதி ஆரம்பத்தில் வெளியிடப்பட்டிருக்கும் அரசாங்க சேவைப் பதவி நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகளைப் பார்வையிடுக.

9. விண்ணப்பப் படிவத்துடன் அபேட்சகர்களுக்கு வழங்கப்பட்ட (" அ " எனக் குறியிடப்பட்ட) அச்சிட்ட அஞ்சல் அட்டையை அதில் கூறப்பட்டிருப்பதுபோல அவர்களே நிரப்பி திருப்பி அனுப்புதல் வேண்டும். அவ்விதம் அவர்கள் செய்தால், இந்த அலுவலகத்தில் அவர்களின் விண்ணப்பப் படிவங்கள் கிடைத்தது பற்றி அவர்கள் அறிவிக்கப் படுவார்கள். இத் தேவையின் பிரகாரம் நடந்து கொள்ளத் தவறிய அபேட்சகர்களுக்கு, அவர்களின் விண்ணப்பங்கள் கிடைத்தது பற்றிய அறிவித்தல் கொடுக்கப்பட மாட்டாது. இத்தேவையின் பிரகாரம் நடந்து கொண்டவர்களுக்கு முடிவு திகதியிலிருந்து மூன்று கிழமைகளுக்குள் அவர்களின் விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டதற்கான அறிவித்தல் கிடையாமலிருந்தால் அவர்கள் அதுபற்றி அரசாங்க சேவை ஆணைக் குழுச் செயலாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி நடக்கத்தவறும் விண்ணப்பதாரர், தன் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கோரும் எந்த உரிமையையும் இழந்தவராவார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
த. பெ. இல. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1969 ம் ஆண்டு மே மீ 28 ந் உ.

6—163/1—6.6.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,857

---

**No. A. 37/X 2099/69**

## அரசாங்க பண்டகசாலைத் திணைக்களம்

### பண்டகசாலை உதவி அத்தியட்சர் பதவி

அரசாங்க பண்டகசாலைத் திணைக்கள உதவி அத்தியட்சர் பதவிக்கு அரசாங்க சேவையிலுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன, விண்ணப்பங்கள் இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்கசேவை அதிகாரசபை, அ.பெ. இல. 500, கொழும்பு 1 என்ற முகவரிக்கு பின்வரும் திகதியில் அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள் 20.6.1969.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் 27.6.1969.

**குறிப்பு.**—(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப்படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும், 9" x 4" அளவுக்குக் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையைத் தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும் அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவர் என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப்படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்கான கடைசித்திகதிவரை பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாளராவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப்படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக்கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பபடிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்கசேவை அதிகாரசபையின் செயலாளருக்கு அனுப்பும்பொருட்டு அனுப்பலாம்.

2. **நியமன நியதிகளும், சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றிச்சம்பள உரித்துடையதுமாகும். இந்நியமனம் ஒருவருட காலத்துக்கு பதில் நியமனமாகக் கருதப்பட்டு, அதன்பின் இவ்வுத்தியோகத்தர் தகுதியானவரெனக் காணப்படின் பதவியில் உறுதிப்படுத்தப்படுவார். பதில் நியமன காலத்தில் அவர் தகுதியற்றவரெனக் காணப்பட்டால் அவரது முன்னைய பதவிக்கு அவர் திருப்பியனுப்பப்படுவார்.

3. **சம்பளமும், படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் வருமாறு—ஆண்டொன்றுக்கு ரூபா 4,080/- ல் தொடங்கி வருடம் ரூபா 360/- வீதம் 12 வருடங்களுக்கு சம்பள ஏற்றமாகப்பெற்று ரூபா 8,400/ - வரை செல்லும்.

4. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும், பொது இலிகிதர் சேவையின் நிருவாக எழுதுவினைஞர் சேவையில் முதலாம், தரம் அல்லது அதற்கு மேல் உள்ள தரத்தில் பதவி வகிப்பவராயும், பண்டசாலை வேலையில் 5 வருடத்திற்குக் குறையாத அனுபவமுள்ளவராயும் அவ்வேலையில் விசேட ஆர்வமுள்ளவராயும், சிறந்த சேவைக்குரிய பாராட்டுக்களைப் பெற்றவராயும் இருத்தல் வேண்டும்.

5. அரசாங்க சேவையிலுள்ள தகுதி வாய்ந்த உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களை தொடர்பான திணைக்களங்களின் தலைவர் களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும், அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல் விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" ஆ " எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

6. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்கசேவை அதிகாரசபை என முகவரியிட்டனுப்ப வேண்டுமெயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

7. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் (கசெற்றின்) I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளது, அவற்றைப் பார்க்க.

8. விண்ணப்பப்படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("அ" எனக் குறியிடப்பட்டுள்ளது), அதிலுள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் கிடைக்கப் பெற்றமை குறித்து அறிவிக்கப்படும். இத்தேவைக்கமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை குறித்து அறிவிக்கப்படமாட்டா. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்ப கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெருவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத்தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரிய,
செயலாளர்,
அரசாங்கசேவை அதிகார சபை.

அரசாங்கசேவை அதிகாரசபை அலுவலகம்,
த. பெ. இல. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1, 1969 ம் ஆண்டு மே 28 ந வ.

6–163/2—6.6.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,857

---

No. AB 38/X 2100/69

## வன திணைக்களம்

### உதவி வன பாதுகாவல் அதிபர்/கனிஷ்ட உதவி வன பாதுகாவல் அதிபர் பதவி

வன திணைக்களத்திலுள்ள உதவி வன பாதுகாவல் அதிபர்/கனிஷ்ட வன பாதுகாவல் அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இந்த அலுவலகத்தில் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று செயலாளர், அரசாங்க சேவை அதிகாரச் சபை, அ. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள் 20.6.1969.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் 27.6.1969.

**குறிப்பு**

(1) அச்சிடப்பட் விண்ணப்பப்படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிட்டதும் 9″ × 4″ அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையைத் தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(2) விண்ணப்பப்படிவம், அல்லது அத்தகையபடிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டெதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(3) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப்படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப்படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கை பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகாரச் சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு, அனுப்பலாம்.

(4) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும் :** இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல் நலமுடையவர்களாக இருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும், இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. (i) **நியமன நியதிகளும், சேவை நிபந்தனைகளும்.**—தெரிவு செய்யப்படும் மனுதாரர்கள் குறிப்பிடப்பட்ட பகுதிகளில் பயிற்சி பெறுவதற்காக வெளிநாடுகளுக்கு அனுப்பப்படக்கூடும். அப்படி வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டால் :—

(அ) வெளிநாடு போவதற்கு முன் இத்திணைக்களத்தின் வேலைகளை கிரகித்துக்கொள்வதற்கு முதலில் வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

(ஆ) அரசாங்கப் பிரமாணங்களுக்கு அமைய கொழும்பிலிருந்து பின் கொழும்பு திரும்புவதற்கும் இலவச பிரயாணச் சீட்டு வழங்கப்படும். (பயிற்சி பெறப்படும் நாட்டிலேயே அவர் ஏற்கனவே இருப்பின் அவருக்குக் கொழும்பிலிருந்து பயணச்சீட்டு வழங்கப்படமாட்டாது.)

(இ) பயிற்சி சம்பந்தமாக அளிக்கப்படும் படி முதலியன அந்நேரத்தைய அரசாங்கப் பிரமாணங்களின்படியே அமையும்.

(ii) **உடன்படிக்கையும் பிணையும்.**—தெரிவு செய்யப்படும் மனுதாரர்கள் இலங்கை அரசாங்கத்துடன் கீழ்க்காணும் விடயத்தை உள்ளடக்கிய உடன்படிக்கையொன்று செய்து கொள்ளவேண்டும்.

(அ) ஏனைய விடயங்களோடு பயிற்சியை நன்றியறிதலுடனும் பின்பற்றி திருப்திகரமாக செய்து முடிப்பேன் என்றும், கேட்டுக்கொள்ளப்பட்டால் பயிற்சி முடிந்தபின் ஓர் குறிப்பிட்ட காலத்திற்கு (அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்படும்) இலங்கை அரசாங்கத்தில் சேவை செய்வேன் என்றும்;

(ஆ) உடன்படிக்கை நியதிகளின்படிக்கும் நிபந்தனைகளின்படிக்கும் நடக்கத்தவறின் இப்பயிற்சியால் ஏற்படும் சகல செலவுகளையும் (இலங்கை அரசாங்கத்தாராலும் உபகாரமளிக்கும் முகவர்களினாலும் செலவு செய்யப்படும்—சம்பளம், படி, பயணச்சீட்டு, கட்டணங்கள் அடங்கலாக அனைத்தையும்) திருப்பிக் கொடுப்பேன் என்றும் உறுதி அளிக்கப்படவேண்டும்.

(iii) பதவிகள் நிரந்தரமானதும் உபகாரச் சம்பளமுடையதுமாகும். பதவியாளர் நியமன திகதியிலிருந்து அவர் நாடு திரும்பி திணைக்களத்தில் பொறுப்பேற்றபின் 5 வருட காலம்வரை தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவர். புலமைப் பரிசில் காலத்திலோ அல்லது தகுதிகாண் நிலை காலத்திலோ அவர்களின் சேவைகள் திருப்திகரமாக இல்லாவிடின் இக்குறிப்பிட்ட காலத்திலோ அல்லது காலமுடிவிலோ வேலைநீக்கத்திற்கு ஆளாவார்கள். நியமன திகதியிலிருந்து 6 வருட காலத்திற்குள் நாட்டு மொழிகளிலும், சட்டம், கணக்கு முதலியவற்றிலும் சித்தியடையும்படி வேண்டப்படுவர்.

3. **சம்பளமும், படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு.—

பதவி வருடச் சம்பளம் ரூபா 4,080 யில் தொடங்கி ரூபா 13,200 வரை உயரும் வருடாந்தச் சம்பள ஏற்றம் ரூபா 360 கொண்ட 12 ம் ரூபா 480 கொண்ட 10 ம் ஆகும். இவ் ஏற்றம் 2 வருடத்திற்கு ரூபா 11,280 யில் ஒரு தடைவையும் ரூபா 8,400 விற்கும் ரூபா 11,760 விற்கும் முன்பதாக வினைத்திறமைகாண் தடைகள் உடையனமாகும். தெரிவு செய்யப்படும் மனுதார் ரூபா 8,880 சம்பள இலக்கை அடையுமுன் குறிப்பிடப்படும் பட்டதாரிப்பயிற்சிப் பட்டக் கல்வியையோ அல்லது வனவியல் தகுதித் தேர்வுப் பத்திரத்தையோ பெறுவிடின், இதற்குமேல் சம்பள உயர்வு பெற அருகதையற்றவராவர்.

4. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளையுடையர் என்பதற்குத் திருத்தியான சான்று காட்டுதல் வேண்டும் :—

(அ) அபேட்சகர் சிறந்த நற்குணமுடையவராயும் உடல் நலமுடைய வராயும் இருத்தல் வேண்டும்.

(ஆ) 20.6.1969 ல் 25 வயதிற்கு மேற்படாதவராகவும்.

(இ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் தாவரவியல் ஒரு பாடமாகக் கொண்ட 1 ம் அல்லது 2 ம் தர இயற்கை விஞ்ஞானப்பட்டம் அல்லது அதே தகுதி வாய்ந்த பட்டம் பெற்றவராக இருக்க வேண்டும். 1 ம் அல்லது 2 ம் தர தாவரவியல் சிறப்புப் பட்டம் பெற்றவர் விரும்பப்பாலது. அங்கீகரிக்கப்பட்ட ஓர் பல்கலைக்கழகத்தின் பயிற்சிப்பட்டம் அல்லது வனவியல் தகுதிகாண் பட்டம் மேலதிக தகைமைகளாகும்.

**குறிப்பு.**—(1) முதலாவதாகத் தேவைப்படும் பட்டம் தவிர்ந்த மேற் கொண்ட பயிற்சிப்பட்டம் அல்லது வனவியல் தகுதிகாண் பட்டம் உடையவர் 30 வயதிற்கு மேற்படாதவர்களாக இருக்க வேண்டும். (2) இலங்கைப் பல்கலைக் கழகங்களின் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றிய வர்களும் முடிவை எதிர்பார்த்திருப்பவர்களும், விண்ணப்பிக்கலாம். ஆனல் முடிவு வெளியானதும் தாம் சித்தியடைந்ததைப்பற்றி எனக்கு உடனடியாக அறிவிக்க வேண்டும். அறிவிக்கத் தவறுபவர்களின் மனுக்கள் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கும்பொழுது, சமர்ப்பித்தல் வேண்டும்:—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (**முக்கிய குறிப்பு.**—சமய தீட்சைச் சான்றிதம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக் குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது.)

(ஆ) பல்கலைக்கழகப் பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்.

(இ) கணச் சான்றிதழ் இரண்டு; இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர், அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதா யிருத்தல் வேண்டும்.

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழினுட்பத் தகைமையும்/உயர் தொழிற்றகைமை அல்லது தொழினுட்பத் தகைமை பற்றிய சான்றிதம்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

**குறிப்பு.**—(1) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்பட மாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப் பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகாரச் சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப் படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" ஆ " எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்பு களையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகாரச் சபை என முகவரி யிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தி யோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" அ " எனக் குறியிடப்பட்டுள்ளது). அதன்கண் அறி வுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பி அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக் கமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெருவிடின் உடனே அரசாங்க சேவை அதிகாரச் சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரச் சபை.

அரசாங்க சேவை அதிகாரச்சபை அலுவலகம்,
த. பெ. இல. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1969 ம் ஆண்டு மே மீ 28 ந உ.

6–163/3—6.6.69 ந திகதிய வர்த்தமானி இல. 14,857

---

AB. 45/X2101/69

## ஆயுள்வேத திணைக்களம்

### ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவி–ஆயுள்வேத வாகடவியல், ஆயுள்வேத ஆராய்ச்சி நிலையம், நாவின்ன

ஆயுள்வேத திணைக்களத்தில் ஆயுள்வேத வாகடவியல் ஆராய்ச்சி உத்தியோகத்தருக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப் பங்கள் இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு, த.பெ. இலக்கம் 500, கொழும்பு 1 என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அதற்கு முன்னராகக் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

(அ) உண்ணுட்டு விண்ணப்பங்கள்—20.6.1969.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள்—27.6.1969.

**குறிப்பு.**—(i) அச்சிட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல்மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் சொந்த முகவரியிடப்பட்டதும் 9″ × 4″ அளவிற் குறையாததுமான முத்திரையிடப்பட்டதுமான உறை ஒன்றினைத் தமது கடிதத்துடன் அனுப்புவதோடு அபேட்சகராக வரவிருப் பவர் அரசாங்க சேவை உத்தியோகத்தரா அல்லாதவரா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதிக்கப்பட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. தங்கள் விண்ணப்பங்களை இறுதி நாட்கள்வரை தாமதிக்கும் அபேட்சகர்கள் அதனலேற்படும் இடருக்குத் தாமே பொறுப்பாவார்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக்கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும் பினல் விண்ணப்பப் படிவங்களை குறித்த காலத்திற்குள், அவர்கள் வசிக்கும் நாட்டிற்குரிய அல்லது அந்நாட்டிற்கு மிக அருகிலுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு அனுப்பும்பொருட்டு அனுப்பிவைக்கலாம்.

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங் கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டில் தெரிவுசெய்யப்பட்ட இலங்கையரான உத்தியோகத்தர்கள் சேவைக்குத் தகுதியான உடல் நலமுடையவர்களா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளவதற்காக மருத்துவச்சோதனை செய்வதன்பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவத் தொழில் புரிவோர்களிடம் செல்லுமாறு வேண்டப்படுகின்றனர். அத்தகைய சோதனைக்காய கட்டணமும், இலங்கைக்கு வருவதற்கான செலவும் அவ்வுத்தியோகத்தர்களாலேயே செலுத்தப்பட வேண்டும்.

2. **சம்பளமும், படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு.—ஆண்டொன்றுக்கு ரூபா 4,080—360 இல் 12 உம், 480 இல் 10—ரூபா 13,200. 11,760 ரூபாவுக்கும், 8,400 ரூபாவுக்கும் முன் தகுதிகாண் தடையும், 11,280 ரூபாவில் ஈராண்டு நிறுத்துகையும் உண்டு.

**குறிப்பு.**—(அ) ஆண்டொன்றுக்கு 8,400 ரூபாவுக்கப்பால் செல்லுமுன் தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் தாவரவியலில் பி.எச்.டி. அல்லது எம். எஸ்ஸி. பட்டம் பெறுதல் வேண்டும்.

(ஆ) ஆட்சேர்க்கும்பொழுது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றின் தாவரவியலில் பி. எச். டி. அல்லது எம். எஸ்ஸி. பட்டமுடைய உத்தியோகத்தர் ஒருவரின் தொடக்கச் சம்பளம் ஆண்டொன்றுக்கு 5,160 ரூபாவாகும்.

3. **நியமன நியதிகளும், சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந்தரமானதும், உபகாரச் சம்பள உரித்துடையதுமாகும்.

**4. கல்வித் தகைமைகளும் பிற தகைமைகளும்.**—ஒவ்வொரு அபேட்சகரும், தான்—

(அ) 20.6.69 அன்று 21 வயதுக்குக் குறையாதவரென்றும், 35 வயதுக்குக் கூடியவரல்லவென்றும், (ஏலவே அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு இக்கூடிய வயதெல்லை பொருந்தாது)

(ஆ) (i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் தாவரவியல் சிறப்புப்பாடமாக முதல் அல்லது இரண்டாம் வகுப்புப் பட்டம் பெற்றவர் என்றும் ;

அல்லது

(ii) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பி.எச்.டி. அல்லது எம். எஸ்ஸி பட்டம் பெற்றவர் என்றும் திருப்திகரமான அத்தாட்சி அளித்தல் வேண்டும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றையும் கேட்கப்படும்பொழுது சமர்ப்பித்தல் வேண்டும்:—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (**முக்கியகுறிப்பு**—சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத்தொகுப்பின்பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது) ;

(ஆ) பல்கலைக்கழகப் பட்டம் அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ் ;

(இ) குணச் சான்றிதழ் இரண்டு. இவற்றிலொன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாய் இருத்தல் வேண்டும் ;

(ஈ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்திபெற்ற மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

**குறிப்பு.**— (i) சாதனங்களையாயினும் சாதனங்களின் பிரதிகளையாயினும் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படும்பொழுது அவற்றைச்சமர்ப்பிக்கத்தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்பட மாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் திணைக்களத்தலைவர்களுக்கூடாகச் சமர்ப்பித்தல் வேண்டும். எனினும், அவர்கள் தாங்கள் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அவ்வறிவித்தல் கடைசித்திகதியன்று அல்லது அதற்கு முன்னதாகக்கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் (“ ஆ ” எனக் குறிக்கப்பட்ட) அஞ்சலட்டையை இதன்பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களும், அவை சம்பந்தமான வேறு தொடர்புகளும் செயலாளர், அரசாங்கசேவை ஆணைக்குழு என முகவரியிடப்பட்டு அனுப்பப்பட வேண்டுமேயொழிய இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தர்களுக்கும் தனிப்பட்ட முறையில் அனுப்பக்கூடாது.

8. இந்த வர்த்தமானியின் ஆரம்பத்தில் I ஆம் பகுதி, II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்கசேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்வையிடுமாறு வேண்டப்படுகின்றனர்.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சலட்டையை (“ அ ” எனக் குறிப்பிடப்பட்ட) அதன்கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பி திருப்பி அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்களின் விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கமைய ஒழுகுபவர் கடைசித்திகதியிலிருந்து மூன்று கிழமைகளுக்குள் விண்ணப்பம் பெற்றமைபற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்கசேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத்தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதும் உடையவராகார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்கசேவை ஆணைக்குழு.

அரசாங்கசேவை ஆணைக்குழு அலுவலகம்,
த. பெ. இலக்கம் 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1.
1969 ம் ஆண்டு மே மீ 28 ந் உ.

6–163/4—6.6.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,857

---

## பூ கற்ப ஆராய்ச்சித் திணைக்களம்

### நூனிலையப் பொறுப்பாளரும், அரும் பொருட்சாலைப் பாதுகாவலருக்குமான பதவி

பூ கற்ப ஆராய்ச்சித் திணைக்களத்திலுள்ள நூனிலையப் பொறுப்பாளரும் அரும் பொருட்சாலைப் பாதுகாவலருக்குமான பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழ் கொடுக்கப்பட்ட படிவத்தில், அதிபர், பூ கற்ப ஆராய்ச்சித் திணைக்களம், 48, ஸ்ரீ ஜினரத்தின வீதி, கொழும்பு 2 என முகவரியிட்டு 1969 ம் ஆண்டு யூலை மாதம் 3 ம் திகதியிலன்றோ அல்லது அதற்கு முன் கிடைக்கக் கூடியதாகவோ அனுப்புதல் வேண்டும்.

2. **சேவைகளும் நிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்பட்டதுமாகும். ஆனால் முதல் மூன்று வருடகாலமும் தகுதிகாண் நிலையில் நியமிக்கப்படுவர்.

3. **சம்பளமும் படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பளத் திட்டம், வருடம் ரூபா 3,900 ல் ஆரம்பமாகி வருடம் ரூபா 180/–யைக் கொண்ட 8 வருட உயர்வுகளாலும் வருடம் ரூபா 240/– யைக் கொண்ட 6 வருட உயர்வுகளாலும் ரூபா 6,780 வரை உயரும்.

4. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளை உடையவர் என்பதற்கு திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும் :—

(அ) அபேட்சகர் சிறந்த நற்குணமுடையவராகவும் உடல் நலமுடையவராகவும் இருத்தல் வேண்டும் ;

(ஆ) வம்சாவழியினாலோ அல்லது பதிவினாலோ இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(இ) 1969 ம் ஆண்டு யூலை மாதம் 3 ம் திகதியில் 20 வயதுக்குட்படாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் ;

(ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களிடமிருந்து பெறும் விண்ணப்பங்கள் வயது கட்டுப்பாடு வேற்றுமையின்றி கவனிக்கப்படும்.) ;

(ஈ) அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையமொன்றில் அல்லது பல்கலைக்கழகமொன்றில் அல்லது இலங்கை நூனிலையாளர் சங்கமொன்றில் நடாத்தப்படும் நூனிலையப் பொறுப்பாளர் பரிசில் தகுதித் தேர்வுப் பத்திர முதற் பரீட்சையில் சித்தியடைந்திருப்பதுடன் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகமொன்றில் பட்டதாரிப் பட்டம் பெற்றவாரக இருத்தல் வேண்டும். புவிவரலாற்றியலில் அறிவு பெற்றவர்களுக்கு சலுகை அளிக்கப்படும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றையும் காட்டுமாறு கேட்கும் பொழுது சமர்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புச் சான்றிதழ் (மு. கு. சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது. ) ;

(ஆ) பல்கலைக் கழகப்பட்டம் அல்லது உயர்தரப் பட்டப் பத்திரம் ;

(இ) நற்சான்றிதழ் இரண்டு : இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருத்தல் வேண்டும் ;

(ஈ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ் ;

**குறிப்பு.**— (i) சாதனங்களையாயினும், அவற்றின் நகல்களையாயினும் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கக் கூடாது ;

(ii) சாதனங்களை சமர்ப்பிக்குமாறு வேண்டும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்பட மாட்டாது.

6. திணைக்கள ஆணையாளர்களுக்கூடாக அனுப்பப்பட்ட விண்ணப்பங்கள் குறித்த திகதிக்குப் பின் இங்கு கிடைத்தால் அவ்விண்ணப்பங்கள் அத்திணைக்கள ஆணையாளரிடம் குறித்த திகதிக்கு முன் கிடைத்து அதை ஏற்குமாறு தாமதத்திற்குத் தகுந்த நியாயம் காட்டி எழுதினால் அவ்விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

7. அபேட்சகர்கள் இத்திணைக்களத்தில் குறித்த நேரம், திகதியில் நேர்முகப் பரீட்சைக்கு வருமாறு வேண்டப்படுவர். இதற்காகிய பயணச் செலவு எதுவும் கொடுபடமாட்டாது.

8. விண்ணப்பங்கள் திணைக்கள ஆணையாளர், பூ கற்ப ஆராய்ச்சித் திணைக்களம் என முகவரியிட்டு அனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக் கூடாது.

9. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்கு பொருத்தமான பொது நிபந்தனைகளை இந்த வர்த்தமானியின் I ம் பாகம் II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன; அவற்றைப் பார்க்க.

எல். ஜே. டீ. பர்ணாந்து,
ஆணையாளர்,
பூ கற்ப ஆராய்ச்சித் திணைக்களம்.

பூ கற்ப ஆராய்ச்சித் திணைக்களம்,
48, ஸ்ரீ ஜினரத்தின வீதி,
கொழும்பு 2,
1969 ம் ௵ மே ௴ 26 ந் உ.

### மாதிரிப் படிவம்

**பூ கற்ப ஆராய்ச்சித் திணைக்களம்**

1. முழுப் பெயர் : ————.
   (பெரிய எழுத்தில்)
   (அ) பெயர் : ————.
   (ஆ) மறு பெயர் : ————.
2. தபால் விலாசம் : ————.
   (விலாசம் மாற்றம் ஏற்பட்டால் உடன் அறிவிக்கப்படல் வேண்டும்)
3. (அ) பிறந்த திகதி : ————.
   (ஆ) 1969ம் ஆண்டு யூலை மாதம் 3ம் திகதியில் வயது : ————
4. தேசிய இனம் : ————.
   (வம்சாவழி அல்லது பதிவுப் பிரசையா எனக் குறிப்பிடுக. பதிவுப் பிரசையாயின் பதிவுப் பத்திர தொடர்பு இலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடுக).
5. பிறந்த இடம் : —.
   (அ) விண்ணப்பதாரர் : ————.
   (ஆ) தகப்பன் : ————.
   (இ) தகப்பன் வழிப் பாட்டன் : ————.
   (ஈ) தகப்பன் வழிப் பூட்டன் : ————.
   (விண்ணப்பதாரர் இலங்கையில் பிறந்திருந்தால் (ஆ), (இ) யும் (ஈ) யும் (அ) வோடு நிரப்புக. அவர் இலங்கையில் பிறக்காவிடின் (ஆ) யும் (இ) யும் அல்லது (இ) யும் (ஈ) யும் (அ) வோடு நிரப்புக.)
6. விண்ணப்பகாரர் விவாகமானவரா ? தனிப்பட்டவரா ? தாரமிழந்தவரா ? ————.
7. கீழ்காணும் தகைமைகளைப் பெறுவதற்குப் படித்த பாடசாலைகளினதும், கல்லூரிகளினதும் சேர்ந்த திகதியும் விலகிய திகதியும் : —.
   (அ) பொதுத் தராதரம் : ————.
   (ஆ) உத்தியோகக் கல்வி : ————.
8. விளையாட்டுக்களில் பெற்ற திறமை விபரங்கள், இத்துறையில் நீர் வகுத்த பொறுப்பான பதவிகள் : ————.
9. (அ) நீர் கடன் தொல்லைகள் இல்லாதவரா ? இருக்கும் பட்சத்தில் கடன் பொறுப்புக்களின் அளவுகள் என்ன : ————.
   (ஆ) சட்ட நீதிமன்றங்களில் ஏதாவது குற்றப்பாதகத்திற்கு குற்றம் சாட்டப்பட்டிருக்கிறீரா ? அப்படியானால் வழக்கு இலக்கத்தை எடுத்துக் காட்டி திகதிகளோடு முழு விபரங்களையும் தருக : ————.
10. பாடசாலைக் கல்வி, உத்தியோகக் கல்வி, நுண்தொழிற் கல்வித் தகைமைகள், பல்கலைக்கழகத்துச் சகல பட்டங்கள், திறமைகள், உத்தியோகக் கல்வி அல்லது நுண் தொழிற் கல்வித் தகைமைகள் முதலியவற்றின் விபரங்களைத் தேறிய சித்தித் தரம் இருந்தால் அவை எடுத்த பாடங்கள், கல்வித் தாபனப் பெயர்கள் இவற்றுடன் தருக : ————.
11. இப்போதைய தொழிலும் முன்பேதேனும் பதவிகளிலிருந்தால் அவ்விபரங்களையும் தருக : ————.
12. விசேட உரிமைகள், தகைமைகள், பயிற்சிகள், அனுபவங்கள் ஏதும் இருந்தால் அவைகளின் விபரங்களைத் தருக : ————.
13. மூன்று நற்சான்றுப் பத்திரங்கள் அளிக்கக் கூடிய தகைமையாளரின் பெயர்களையும் விலாசங்களையும் பதவிப் பெயர்களையும் தருக : ————

இவ்விண்ணப்பப் பத்திரத்தில் என்னால் தரப்பட்டிருக்கும் விபரங்கள் யாவும் உண்மையானவையென்றும் சரியானவையென்றும் நான் அத்தாட்சிப் படுத்துகிறேன்.

இதனுள் அடங்கியிருக்கும் விபரங்கள் எவையேனும் பொய்யானவை, சரியற்றவையென்று தெரிவு செய்யப்படுமுன் அறிந்தால் தகுதியற்றவனாகக் காணப்படுவேனென்றும், நியமனம் பெற்ற பிற்பாடு சரியற்றவையெனக் கண்டு பிடிக்கப்பட்டால் நட்ட ஈடு எதுவுமின்றி பதவியால் நீக்கப்படுவேனென்றும் நான் அறிந்திருக்கிறேன்.

————.
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

இடம் : ————.
திகதி : ————.

6–106—6.6.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,857.

---

## பொம்பரிப்பு பத்து கிராமசபைப் பகுதிக்குத் திடீர் மரண விசாரணை அதிகாரிக்கான பதவி

புத்தளம் மாவட்டத்தில் புத்தளம் பத்துக் காரியாதிகாரியின் பிரிவில் பொம்பரிப்பு பத்து கிராமசபைப் பகுதிக்குத் திடீர் மரண விசாரணை அதிகாரி பதவிக்கு விண்ணப்பங்கள் ஏற்கப்படுகின்றன. கீழ் உள்ள மாதிரிப் படிவத்தில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 28.6.69 ல் அல்லது அதற்கு முன்னர் எனக்குக் கிடைத்தல் வேண்டும்.

**ஆட்சியெல்லையின் பகுதி**

பொம்பரிப்பு பத்துக் கிராமச்சபைப் பகுதியினுள்ள எல்லாக் கிராம சேவகரின் பிரிவுகள்.

2. இப்பதவிக்குக் குறிக்கப்பட்ட சம்பளம் கொடுபடமாட்டாது. ஒவ்வொரு விசாரணைக்கும் ரூபா 7.50 கொடுக்கப்படும்.

3. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பின்வரும் தகைமைகள் உடையவரெனத் திருப்திகரமாக நிரூபித்தல் வேண்டும் :—

(அ) 28.6.69 ல் வயது 30 க்குக் குறையாதவராகவும் 60 க்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(ஆ) நற்குணமுடையவராகவும் உடல் நலம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

(இ) இப்பகுதியில் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

(ஈ) பின்வருவனவற்றில் ஒரு பரீட்சையில் சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டும் :—

(i) 1925 ம் ஆண்டு தொடக்கம் 1944 ம் ஆண்டு வரைக்கும் நடைபெற்ற சுயபாஷைப் பாடசாலை விடுகைத் தராதர பத்திரம் அல்லது சிங்களம் அல்லது தமிழை ஒரு பாடமாகக் கொண்ட ஆங்கில பாடசாலை விடுகைத் தராதரப் பத்திரம் அல்லது சிங்களம்/தமிழ் ஒரு பாடமாகவுள்ள சிங்களம்/தமிழ்/ஆங்கில கனிஷ்ட தராதரப் பத்திரம்.

(ii) இதே போன்ற ஒரு பரீட்சை அல்லது உயர்வான பரீட்சை.

4. அபேட்சகர்கள் விண்ணப்பங்களுடன் பின்வரும் பத்திரங்களின் பிரதிகளை அனுப்புதல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுப் பத்திரம்.

(ஆ) ஆகக்கூடிய கல்வித் தராதரப் பத்திரம்.

(இ) விண்ணப்பதாரரின் நற்குணத்தை அத்தாட்சிப்படுத்தக்கூடிய இரண்டு சமீபத்திய நற்சாட்சிப் பத்திரங்கள். இவற்றில் ஒன்று கிராம சேவகரால் வழங்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பதாரரின் நிரந்தர வசிப்பிடம் பற்றிய கிராம சேவகரின் அத்தாட்சிப் பத்திரம்.

5. அரசாங்க ஊழியர்கள், கூட்டுத்தாபனத் தொழிலாளர்கள், உள்ளூராட்சிச் சபைகளின் அங்கத்தவர்கள் ஆகியோர் திடீர் மரண விசாரணை அதிகாரிகளாக நியமனம் பெறத் தகுதியற்றவர்களாவர்.

6. விண்ணப்பம் கிடைத்தது பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

எம். டபிள்யு. எஸ். குணரத்ன,
அரசாங்க அதிபர், புத்தளம்.

கச்சேரி, புத்தளம்,
1969 ம் ௵ மே ௴ 25 ந் உ.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**திடீர் மரண விசாரணை அதிகாரி பதவி :** ——————

1. விண்ணப்பதாரரின் பெயரும் முழு விலாசமும் (பெரிய எழுத்தில்) : ——————.
2. நிரந்தர வசிப்பிடமும் வசித்த காலமும் :——————.
3. —————— ல் சரியான வயது. வருடங்கள் : —————— மாதங்கள் : —————— நாட்கள் : —————— பிறந்த திகதியும் பிறப்பிடமும் :——————.
4. விவாகமானவரா விவாகமாகாதவரா ? :——————.
5. கல்வித் தகைமைகள் :——————.
6. தற்போதைய தொழில் :——————.
7. பொருளாதாரத் தட்டுப்பாடு ஏற்பட்டதுண்டா ? அவ்வாறுமின் விபரங்கள் தருக :——————.
8. விண்ணப்பதாரரின் சொத்துக்களின் அளவுகளும், பெறுமதியும் : ——————.
9. விண்ணப்பதாரர் நீதிமன்றத்தில் ஏதாவது குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்டவரா ? ஆமெனில் விபரங்கள் தருக :——————.
10. இப்பதவிக்கான வேறு ஏதாவது விசேட தகைமைகளின் விபரங்கள்: ——————.

இந்த விண்ணப்பத்தில் என்னுல் கொடுக்கப்பட்ட விபரங்கள் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் நான் இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன். இதில் கொடுக்கப்பட்ட ஏதாவது விபரங்கள் பிழையானவையாகவோ அல்லது உண்மையற்றனவையாகவோ காணப்பட்டால், தெரிவுக்கு முன்னர் இத்தவறு கண்டுபிடிக்கப்பட்டால் விண்ணப்பிக்கத் தகுதியற்றவனுகக் கருதப்படுவேன் என்பதையும் தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் நஷ்ட ஈடின்றி வேலை நீக்கம் செய்யப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

——————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :——————.

6–2—6.6.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,857

---

## நீதிச்சேவை ஆணைக்குழு

### காதியின் பதவி

முஸ்லீம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் கீழ் (அதிகாரம் 115) கொழும்பு தெற்கு காதியின் பதவிக்கு நியமிக்கப்படுவதற்கென நீதிச் சேவை ஆணைக்குழு விண்ணப்பங்கள் கோருகின்றது.

விண்ணப்பதாரிகள் ஆண்முஸ்லீம்களாகவும் இலங்கைப் பிரசைகளாகவும் 35 வயதிற்குட்படாதவர்களாகவும், நல்லொழுக்கமும் நல்ல நிலையிலுமுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும்.

ஒரு காதி எப்பிரதேசத்திற்கென நியமிக்கப்படுகிருரோ அவர் அப்பிரதேசத்திலேயே சட்டமுறைப்படி வசிக்கக் கடப்பாடுடையர். இங்கு குறிப்பிடப்பட்ட நீதிபரிபாலனமாவட்டம் பின்வரும் பிரதேசங்களை கொண்டதாகும் :

கொழும்பு மாநகரின் கும்பனித்தெரு, உனுப்பிட்டி, வேக்கந்த, கறுவாத்தோட்டம், கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி, கல்லகடவுன், திம்பிரிகசய, வெள்ளவத்தைவடக்கு, வெள்ளவத்தை தெற்கு ஆகிய மாநகர வட்டாரங்களையும், கொட்டாரேட்டிலுள்ள சுதேச வைத்தியக் கல்லூரியும் வைத்தியசாலையும் ஆகியவற்றிற்குக் கிட்ட ஆரம்பித்து பத்தரமுள்ள வழியாக தலங்கமவடக்கு, மலபே, கொகந்தர, அதுரிகிரிய, பனுகொட, கொடகம, மீகொட என்பவற்றிற்கு ஊடாகச்சென்று பாதுக்கையில் முடிவடையும் பொதுவேலைப்பகுதிவீதிக்குத் தெற்கேயுள்ள பிரதேசத்தையும் கொண்ட கொழும்பு நீதிபரிபாலன மாவட்டத்தைச் சேர்ந்த அந்தப்பாகம்.

தெரியப்படுபவர்கள், நியமனக்கடிதத்தில் குறிப்பிடப்படும் ஒரு காலவெல்லைக்கு நியமிக்கப்படுவர்.

விண்ணப்பங்கள் என்னிடமிருந்து பெறக்கூடிய விசேட படிவங்களில் செய்யப்படுதல் வேண்டும். அவை 27.6.69 ஆந் திகதியின் முன்பாக இந்த அலுவலகத்தைச் சேர்தல் வேண்டும்.

சிறீமேவன் அமரசிங்க,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழு அலுவலகம்,
தபாற் பெட்டி இலக்கம் 573,
கொழும்பு 12.
1969 ம் ஆண்டு மே மீ 27 ந உ.

6–165—6.6.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,857

---

## கடற்ருெழில் திணைக்களம்

### கடற்ருெழில் உதவியாளர் பதவி

கடற்ருெழில் திணைக்களத்தில், கடற்ருெழில் உதவியாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழுள்ள மாதிரிப் படிவத்தில் தயாரிக்கப்பட்டு, 1969 ஜூன் 20 ம் தேதியன்றோ அதற்கு முன்னரோ எம்மை வந்தடையுமாறு அனுப்பப்பட வேண்டும்.

2. **சம்பளம்.**—இப்பதவிக்கான சம்பள விகிதம் வருமாறு :—ஆண்டுக்கு ரூபா 3,360 இலிருந்து ஆண்டுதோறும் ரூபா 360 ஏற்றத்துடன், ஆண்டுக்கு ரூபா 8,400 வரை வளரும்.

3. **நியமன நியதிகள்.**—பதவி நிரந்தரமானதும், உபகாரச் சம்பளமுடையதுமாகும். நியமனம் முதல் மூன்று ஆண்டுக் காலத்துக்குத் தகுதிகாண் நிலையிலிருந்தும், நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் தெரியப்படுமிடத்து, தொடக்கத்தில், ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு பதில் பணியில் அமர்த்தப்படுவர்.

4. நியமன தேதியிலிருந்து 4 ஆண்டுகளுள் அரசாங்க சேவை ஆணைக்குழு விதிகள், நிதிப் பிரமாணங்கள், நடைமுறைக் கைநூல் பிரமாணங்கள், கடற்ருெழில் கட்டளைச் சட்டமும் பிரமாணங்களும் ஆகியவற்றின் தேர்வில் உத்தியோகத்தர் சித்தியுற வேண்டும். நாலு ஆண்டுகளுள் இத்தேர்வில் சித்தியுறத் தவறுமிடத்து, அடுத்துவரும் சம்பள ஏற்றம், தேர்வுச் சித்தியுறும் காலம் வரை நிறுத்தி வைக்கப்படும்.

5. **வேண்டிய தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தான் பின்வருந் தகைமைகளுடையவரென்பதற்குத் திருத்தியான சான்று காட்டுதல் வேண்டும் :—

(i) 1969 ஜூன் 20 ந் தேதியன்று 22 வயதுக்குக் குறையாதவராயும், 35 வயதுக்குக் கூடாதவராயும் (எற்கனவே அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தரை இவ்வயதெல்லைகள் பாதிக்காது), இருக்க வேண்டும்.

(ii) ஒரு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழக பட்டதாரியாகவும் இருத்தல் வேண்டும் (நிர்வாக அனுபவம் உள்ளோர்க்கு முதலுரிமை அளிக்கப்படும்).

குறிப்பு.—திணைக்களத்திலிருந்து மனுச் செய்யும் விண்ணப்பதாரர் எஸ்.எஸ்.சீ. அல்லது அதையொத்த அல்லது அதற்கு மேலான பரீட்சைகளில் தேறியவர்கள், அரசாங்கத்தில் 10 வருட திருத்தியான சேவையுடையவர்களின் விண்ணப்பங்கள் கருதப்படும்.

(iii) மிகத் திறமையான ஒழுக்க குணமும், உடற்றகைமையும் உடையவராக இருத்தல் வேண்டும்.

6. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பங்களுடன் பின்வருவனவற்றின் பிரதிகளை (மூலங்களையல்ல) இணைக்க வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (மு. க.—ஞானஸ்நானச் சான்றிதழ் அல்லது உதவிபெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்கு விதிக் கோவையின் தேவைக்கென வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா).

(ஆ) பட்டம் அல்லது ஆகக்கூடிய கல்விச் சான்றிதழ்.

(இ) இரண்டு குணச்சான்றிதழ்கள், ஒன்று கல்வி இயக்குநர், கல்லூரி விரிவுரையாளர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றிருக்க வேண்டும்.

(ஈ) உயர் தொழிலுக்குரிய அல்லது தொழிநுட்பச் சான்றிதழ்கள் அல்லது இரண்டும்.

(உ) சிங்களம் அல்லது தமிழில் அல்லது இரண்டிலும் சித்தியுற்ற உயர் தேர்வின் சான்றிதழ்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும், கடற்ருெழில் இயக்குநர் என்று பதவி குறித்தனுப்ப வேண்டுமேயன்றி, இத்திணைக்களத்துள்ள எந்த உத்தியோகத்தருக்கும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காக நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைப் பார்க்கவும்.

ஐ. ஓ. கே. ஜீ. பர்ணந்து,
கடற்ருெழில் இயக்குநர்.

கடற்ருெழில் திணைக்களம்,
த. பெ. எண் 531,
கொழும்பு 3,
1969 ம் ஆண்டு மே மீ 29 ந உ.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

### கடற்றொழில் உதவியாளர் பதவி

1. முழுப் பெயர் :————.
(அ) சொந்தப் பெயர் :————.
(ஆ) ஏனைய பெயர்கள் :————.
2. தபால் விலாசம் :————.
3. (அ) 1969 ம் ஆண்டு ஜூன் மாதம் 20 ந் திகதியன்று உள்ளபடி வயது : வரு.:————மா. :————நாள் :————
(ஆ) பிறந்த தேதி :————.
(பிறப்புச் சாட்சிப்பத்திரத்தின் பிரதி இணைக்கப்படவேண்டும்)
4. பின்வருவோர் பிறந்த இடம் :—
(அ) விண்ணப்பதாரர் :————.
(ஆ) விண்ணப்பதாரரின் தகப்பன் :————.
(இ) விண்ணப்பதாரரின் தகப்பன் வழிப் பாட்டன் :————.
(ஈ) விண்ணப்பதாரரின் தகப்பன் வழிப்பூட்டன் :————.
5. தேசிய இனமும், எப்படிப் பெறப்பட்டதென்பதும் :————.
6. விண்ணப்பதாரி விவாகமானவரா ? விவாகம் செய்யாதவரா ? தாரமிழந்தவரா ? :————.
7. கல்வித் தகைமைகள், சித்தியுற்ற பொதுத் தேர்வுகளின் தேதிகளும், இறுதியாகத் தோற்றிய பொதுத் தேர்வில் எடுத்த பாடங்களும் :————.
8. கல்வி முடிவுற்றபின் செய்த தொழில், தேதிகளுடனும், விபரங்களனைத்துடனும் :————.
9. தொழினுட்ப அல்லது உயர் தொழிற்றகைமைகள், தேர்வின் அல்லது பயிற்சி முடிவின் தேதிகளுடன் :————.
10. உடற்பயிற்சி, விளையாட்டு நடவடிக்கைகளின் விபரங்கள் :————.
11. ஆங்கிலத்துடன் அல்லது சிங்களத்தில் அல்லது தமிழில் வாசித்தல், எழுதல், மொழிபெயர்ப்புத் தகைமைகள் :————.
12. தற்போதைய தொழிலும், சம்பளமும் :————.
13. குணச் சான்றிதழ்கள் வழங்காதவர்களும், விண்ணப்பதாரரை நேரடியாக அறிந்தவர்களுமான இரு நடுவர்களின் பெயர்களும், பதவிகளும், முகவரிகளும் :————.
14. யாதேனும் விசேட உரிமைகள் : (உ–ம்): இவ்விண்ணப்பம் சம்பந்தமான வேலை அனுபவம் : ————.
15. யுத்த சேவை இருப்பின் :————.
16. வேறு மேலதிக விபரங்கள் :————.

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும், செம்மையானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இவ்விபரங்களில் யாதேனும் உண்மையற்றவை அல்லது பிழையானவை எனத் தெரிவுக்குமுன் காணப்படின், நான் தகுதியற்றவராக்கப்படுவேன் எனவும், நியமனஞ் அளிக்கப்பட்ட பின் காணப்படின் எவ்வித நஷ்ட ஈடுமின்றி விலக்கப்படுவேன் எனவும் அறிவேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

6—15—6.6.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,857

---

## அம்பாரை மாவட்டத்தில் சம்மாந்துறைப் பிரிவுக் காரியாதிகாரி பகுதியிலுள்ள நாவிதன்வெளி கிராம சபைப் பிரதேசத்திற்கு சடுதி மரண விசாரணையாளர் ஒருவரை நியமித்தல்

அம்பாரை மாவட்டத்தில் சம்மாந்துறைப் பிரிவுக் காரியாதிகாரி பகுதியில் உள்ள நாவிதன்வெளி கிராம சபைப் பிரதேசத்திற்கு சடுதி மரண விசாரணையாளர் பதவிக்காக கீழ் குறிப்பிட்ட தகுதிகள் இருக்கும் அபேட்சகர்கள் மனுச்செய்யலாமென இத்தால் அறிவிக்கின்றேன். கீழ் குறிப்பிட்ட படிவத்தில் குறிப்பிட்டபடி நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள் 1969.6.20 ம் திகதிக்கு முன்பாக எனக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

1. **விலாசம் :** மாவட்ட அதிபர், மாவட்ட அதிபர் காரியாலயம் அம்பாறை.

2. **தகுதிகள் :**—(அ) விண்ணப்பம் பாரம் எடுக்கும் கடைசித் தினத்தில் வயது 30 ற்கும் 60 ற்கும் உள்ளடங்குதல் வேண்டும்.
(ஆ) மிக நல்லொழுக்கமுடையவராயும் திடகார்த்தமுள்ளவராயும் இருத்தல் வேண்டும்.
(இ) விண்ணப்பகாரர் மேற் குறிப்பிட்ட கிராம சபைப் பிரதேசத்தில் நிரந்தரமாக வசிப்பவராய் இருத்தல் வேண்டும்.
(ஈ) தமிழ் ஏழாம் வகுப்புச் சித்தியெய்தியவராக இருத்தல்வேண்டும். சிங்கள அறிவு விசேஷ தகுதியாகக் கணிக்கப்படும்

3. விண்ணப்பகாரர்களால் அவர்களின் விண்ணப்பங்களுடன் கீழ் குறிப்பிட்டுள்ள சாதனங்களின் பிரதிகள் (மூலப்பிரதிகள் தவிர்த்து) சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும்.

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் ;
(ஆ) கூடுதலாகச் சித்தியெய்திய பரீட்சைச் சான்றிதழ் ;
(இ) சமீப காலத்தில் கிடைக்கப்பெற்ற நற்சான்றிதழ் இரண்டு.

4. விண்ணப்பங்கள் விண்ணப்பகாரரின் கையெழுத்தால் எழுதப்படல் வேண்டும்.

5. இப் பதவிக்காக நேர்முகமாகவோ அல்லது மறைமுகமாகவோ உதவி பெறுவதற்குத் தெண்டித்தால், அவர் தகுதியற்றவர் என கணிக்கப்படுவர்.

6. விண்ணப்பகாரர்கள் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்க நேரிடும். ஆனால் பிரயாணச் செலவோ அல்லது வேறு ஏதும் அவர்களுக்குக் கொடுக்கப்படமாட்டாது.

7. இப் பதவிக்காக, அரசாங்கத்தில் அல்லது கூட்டுத் தாபனங்களில் வேலை செய்யும் ஆட்களிடமிருந்தும், உள்ளூராட்சிமன்ற அங்கத்தவர் களிடமிருந்தும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

8. விண்ணப்பகாரர்களின் ஆங்கில அறிவு மேலதிக தகைமையாகக் கவனிக்கப்படும்.

சி. நாராயணசாமி,
மேலதிக அரசாங்க அதிபர்,
அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபருக்காக.

கச்சேரி,
அம்பாறை மாவட்டம்,
1969 ம் ஆண்டு மே மீ 24 ந் உ.

### மாதிரி விண்ணப்பப் பத்திரம்

1. விண்ணப்பகாரரின் முழுப் பெயர் (தெளிவாக) : ————.
2. விலாசம் : ————.
3. நிரந்தரமாக வசிக்கும் இடமும் அதில் வசித்துவரும் காலமும் : ————.
4. (அ) விண்ணப்பம் பாரம் எடுக்கும் கடைசித் திகதியில் வயது : ————.
(ஆ) பிறந்த திகதியும் இடமும் : ————.
5. விவாகமானவரா அல்லது தனிநபரா : ————.
6. கல்வித் தராதரம் : ————.
7. தற்போது செய்யும் தொழில் : ————.
8. இதற்குமுன் தொழில் செய்திருந்தால் அவைபற்றிய விபரங்கள் : ————.
9. தனக்குச் சொந்தமான சொத்துக்களும் அவைகளின் விபரமும் பெறுமதியும் : ————.
10. விண்ணப்பகாரர் கடனாளியா ? : ————.
11. விண்ணப்பகாரர் ஏதும் குற்றத்திற்காக கோட்டில் தண்டிக்கப்பட்டவரா ? : ————.
12. இப்பதவிக்காக வேறு ஏதும் உகந்த தகைமைகள் இருப்பின் அவைகளின் விபரம் : ————.

மேற் குறிப்பிட்ட விபரங்கள் உண்மையெனவும் பிழையொன்றுமில்லையெனவும் இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி : ————.

6–27—6.6.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,857

## தகவல் பகுதி

### திரைப்படப்பிரிவு உதவியாளர்

மேற்குறித்த பதவிக்கு விண்ணப்பங்கள்கோரி, 1969, மே மாதம் 22 ஆம் தேதி வெளியான 14,855 ஆம் இலக்க அரசினர் வர்த்தமானியில், முதலாம் பாகம் 2 ஆம் பிரிவின் 4(பீ) ஆம் பந்தியில், பிரசுரிக்கப்பட்ட மேற்படி பதவிக்குரிய கல்வித்தகைமை பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது :—

4(ஆ) சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திர பரீட்சையில் அல்லது அதனை ஒத்த பரீட்சையில் அல்லது அதிலும் உயர்ந்த பரீட்சையில் சித்தி எய்தியவராகவும், திரைப்படம் எடுப்பதற்கு வேண்டிய சாதனங்களையும் ஒன்று சேர்ப்பதற்குரிய பூர்வாங்க ஏற்பாடுகளைச் செய்தற்கு கணிசமான அனுபவம் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும். செயலமைப்பு ஆற்றலும், கணக்குகள் சம்பந்தமான அறிவும் பெற்றவரென்பதற்குச் சான்று காட்டுதல் வேண்டும். தட்டெழுத்து அறிவும், திரைப்படத் தயாரிப்பு வேலையில் அனுபவமும் பெற்றவருக்கு முதன்மை அளிக்கப்படும்.

அரசாங்க சேவையிலுள்ளவர்கள் இதர தகைமைகளைப் பெற்றிருப்பின், கல்வித் தகைமையைப்பற்றிப் பொருட்படுத்தாது விண்ணப்பிக்கலாம்.

2. விண்ணப்பங்கள் முடிவுறும் தேதி 1969, ஜூன் மாதம் 16 ஆம் தேதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

எஸ். எல். பி. அமுனுகம,
தகவல் அதிபர்.

தகவற் பகுதி,
இல. 7, சேர் பாரன் ஜயதிலக்க மாவத்தை,
கொழும்பு 1, மே, 28 1969.

6-65—6.6.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,857

---

## சிறுவர் நல்லொழுக்கப் பரிபாலன திணைக்களம்

### உதவி விடுதி ஆசிரியை பதவி

சிறுவர் நல்லொழுக்கப் பரிபாலன திணைக்களத்தில் உதவி விடுதி ஆசிரியை பதவிக்கு விண்ணப்பப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பப்பத்திரங்கள்—

(அ) அபேட்சகர் இவ்வறிவித்தலின் அடியில் குறித்துக் காட்டப்பட்டுள்ள வகையில் மாதிரிப்பத்திரத்தினை அமைத்து தன் கையெழுத்திலேயே நிரப்பி,

(ஆ) சிறுவர் நல்லொழுக்கப் பரிபாலன திணைக்களத்தின் ஆணையாளர், த.பெ. 546, 103 1/1, த மெல் கட்டிடம், சதம் வீதி, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு (பெயர் காட்டி முகவரி காட்டப்படலாகாது),

(இ) 1969.6.28 ம் திகதியன்றோ அதற்கு முன்பாகவோ பதிவு செய்யப்பட்ட கடிதத்தில் அனுப்பப்பட வேண்டும்.

**குறிப்பு.**—விண்ணப்பப் பத்திரங்கள் அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "உதவி விடுதி ஆசிரியை பதவிக்கு" எனக் குறிப்பிடுக.

3. **சம்பளம்.**—இப்பதவிக்கான சம்பள அளவுத்திட்டம் : வருடாந்த ஆரம்பச் சம்பளம் 1,740/- ரூபா, பின்னர் வருடாந்தம் 120 ரூபா வீதம் 17 வருடங்களுக்குப் பின்னர் ஆகக்கூடியது வருடாந்தச் சம்பளம் ரூபா : 3,780/- ஆகும்.

4. **நியமன விதிகள்.**—பதவிகள் நிரந்தரமும், இளைப்பாறுச் சம்பளமுடையதும், தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் அவசியம் ஏற்படும்போது அரசாங்க சேவை சகாயநிதி கொடுக்க வேண்டும்.

5. **சேவை நிபந்தனைகள்.**—தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர்கள்—

(அ) மூன்று வருட (3) தகுதிகாண் காலத்திற்கு அமைவர்.

(ஆ) நிரந்தரமான உத்தியோகத்தர் தேர்ந்தெடுக்கப்பட்டால் கடமைபார்க்கும் நியமனமாகக் கருதப்படுவர்.

(இ) வேலையில் அமர்த்துவதற்காக தரப்படும் விசேட பயிற்சியை முடித்து, அதன் இறுதியில் நடாத்தப்படும் தகுதிகாண் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

(ஈ) இலங்கை பூராவிலும் சேவை செய்தல் வேண்டும்.

6. **கல்வியும் மற்றும் தகைமைகளும்.**—

(1) இலங்கைவாசி.

(2) 1969.6.28 ஆந் திகதி விண்ணப்பக்காரர் 22 வயதிற்குக் குறையாதவராயும் 35 வயதிற்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும்.

(அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பகாரர்களுக்கு மேற்சொல்லப்பட்ட வயதுக் கட்டுப்பாடு அநாவசியமானது)

(3) அடையப்பெற்றவராக :—இலங்கை கல்வித் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சைப் பத்திரம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட சர்வகலாசாலையின் பொதுக்கலை தகுதிகாண் பரீட்சைப் பத்திரம் (G. A. Q.) அல்லது அதற்குச் சமமான தகுதி உடையவராக.

(4) மிகவும் குணமுடையவராகவும் தேக நலனுடையவராகவும்.

**குறிப்பு :**—சமூக சேவை வேலைகளில் செய்முறையில் அனுபவமடைந்தவரும் தகைமையும் உடைய அபேட்சகருக்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.

7. விண்ணப்பகாரர் தனது விண்ணப்பப்பத்திரத்துடன் கீழ்க் குறிப்பிட்ட பத்திரங்களின் பிரதி மாத்திரம் இணைத்து அனுப்ப வேண்டும்.

(அ) பிறப்புக் கொப்பி (ஞானஸ்நானத்திற்கு அல்லது கல்விக் கட்டளையிற் கொடுக்கப்பட்ட பிறப்புக் கொப்பி ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது)

(ஆ) பெற்றுள்ள உயர்தர கல்வித் தராதரப் பத்திரம்.

(இ) அண்மையில் பெற்ற மூன்று நற்சாட்சிப் பத்திரங்கள்.

8. குறிக்கப்பட்ட திகதிக்குப் பின்னால் இந்தக் கந்தோருக்கு அனுப்பப்படும் விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் மேற்காட்டப்பட்ட 6 ம் பந்தியின்படி தகைமையுடையவராக இருந்தால் விண்ணப்பப்பத்திரங்கள் அவர்கள் வேலை பார்க்கும் திணைக்களத் தலைவர் மூலமாக அனுப்பப்படல் வேண்டும். ஆனால் குறிக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரங்கள் திணைக்களத் தலைவரால் குறிக்கப்பட்ட திகதிக்குள் கிடைத்ததென்றும், விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளும்படி போதிய காரணம் காட்டி சிபார்சு செய்தால் அவ்விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

9. இந்த வர்த்தமானியில் பகுதி I, தொகுதி II ன் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பகுதி நியமனங்களுக்குரிய பொது நிபந்தனையைப் பார்வையிடுமாறு வேண்டிக் கொள்ளப்படுகின்றது.

10. அறிவித்தலின் தேவைகளுக்கு அடங்காத விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பப் பத்திரங்கள் பெற்றமை ஒப்புக் கொள்ளப்படமாட்டாது.

11. ஒரு அபேட்சகருக்காக எவ்வித வசீகரத் தொடர்பும் வைத்திருந்தால், குறிக்கப்பட்ட அபேட்சகர் தகுதியற்றவராகக் கருதப்படுவர்.

டபிள்யூ. ஆர். பி. ராஜகருணு,
சிறுவர் நல்லொழுக்கப் பரிபாலன ஆணையாளர்.

சிறுவர் நல்லொழுக்கப் பரிபாலனத் திணைக்களம்,
103, 1/1 த மெல் கட்டிடம்,
சதம் வீதி,
கொழும்பு 1,
1969.5.26.

## குறிக்கப்பட்ட படிவம்

**உதவி விடுதி ஆசிரியை பதவிக்கு விண்ணப்பப்பத்திரம்**

1. முழுப் பெயர் (தெளிவான எழுத்தில்) :————.
2. நிரந்தர விலாசம் :————.
3. வயதும் பிறந்த திகதியும் (பிறப்புச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்) :————.
4. விண்ணப்பக்காரரின் தந்தை பிறந்த திகதியும் இடமும் :————.
5. விவாகமானவரா ? அல்லது விவாகமாகாதவரா ? :————.
6. (i) சித்தியடைந்துள்ள உயர்ந்த பரீட்சைகள் :—
   (அ) சிங்களம் :————.
   (ஆ) தமிழ் :————.
   (இ) ஆங்கிலம் :————.
   (தராதரப்பத்திரங்களின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)
   (ii) பயின்ற பாடசாலை :————.
7. சிங்களம், தமிழ், ஆகிய மொழிகளில் வாசிப்பு, எழுத்து, மொழிபெயர்ப்பு சம்பந்தமான தகுதி :————.
8. சமூக சேவை சம்பந்தமான தகுதியும் அனுபவமும்.: (பத்திரங்களின் பிரதி இணைக்கப்படல் வேண்டும் : ————.
9. பாடசாலையை விட்ட காலம் தொடக்கம் செய்த தொழில்களைப் பற்றிய பட்டோலையும், அரசாங்கத்தின் கீழ் வேலை செய்திருந்தால் அதன் விபரங்களும் :————.
10. தற்போதைய தொழில் :————.
11. இணைக்கப்பட்டுள்ள நற்சாட்சிப்பத்திரங்கள் கொடுத்தவர்களின் பெயரும், விலாசமும் :————.
   (குறிப்பு :—பத்திரங்களின் பிரதியேயன்றி மூலப் பிரதிகளை அனுப்பக்கூடாது. அனுப்பப்பட்ட பத்திரங்கள் திருப்பி அனுப்பப்படமாட்டாது)

விண்ணப்பகாரரின் கையொப்பம்.
————,

திகதி :————.

6-52—6.6.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,857

---

## புத்தளம் நகரசபைப் பகுதிக்கு மேலதிக திடீர் மரண விசாரணை அதிகாரிக்கான பதவி

புத்தளம் மாவட்டத்தில் புத்தளம்பத்துக் காரியாதிகாரியின் பிரிவில் புத்தளம் நகரசபைப் பகுதிக்குத் திடீர் மரண விசாரணை அதிகாரி பதவிக்கு விண்ணப்பங்கள் ஏற்கப்படுகின்றன. கீழ் உள்ள மாதிரிப் படிவத்தில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 28.6.69 ல் அல்லது அதற்கு முன்னர் எனக்குக் கிடைத்தல் வேண்டும்.

**ஆட்சியெல்லையின் பகுதி**

புத்தளம் நகரசபைப் பகுதியிலுள்ள எல்லாக் கிராம சேவகர்களின் பிரிவுகள்.

2. இப்பதவிக்குக் குறிக்கப்பட்ட சம்பளம் கொடுபடமாட்டாது. ஒவ்வொரு விசாரணைக்கும் ரூபா 7.50 கொடுக்கப்படும்.

**தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பின்வரும் தகைமைகள் உடையவரெனத் திருப்திகரமாக நிரூபித்தல் வேண்டும் :—

(அ) 28.6.69 ல் வயது 30 க்குக் குறையாதவராகவும் 60 க்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(ஆ) நற்குணமுடையவராகவும் உடல் நலம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

(இ) இப்பகுதியில் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

(ஈ) பின்வருவனவற்றில் ஒரு பரீட்சையில் சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டும் :

(i) 1925 ம் ஆண்டு தொடக்கம் 1944 ம் ஆண்டு வரைக்கும் நடைபெற்ற சுயபாஷைப் பாடசாலை விடுகைத் தராதரப் பத்திரம் அல்லது சிங்களம் அல்லது தமிழை ஒரு பாடமாகக் கொண்ட ஆங்கில பாடசாலை விடுகைத் தராதரப் பத்திரம் அல்லது சிங்களம்/தமிழ் ஒரு பாடமாகவுள்ள சிங்களம்/தமிழ்/ஆங்கில கனிஷ்ட தராதரப் பத்திரம்.

(ii) இதே போன்ற ஒரு பரீட்சை அல்லது உயர்வான பரீட்சை.

4. அபேட்சகர்கள் விண்ணப்பங்களுடன் பின்வரும் பத்திரங்களின் பிரதிகளை அனுப்புதல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுப் பத்திரம்.

(ஆ) ஆகக்கூடிய கல்வித் தராதரப் பத்திரம்.

(இ) விண்ணப்பகாரரின் நற்குணத்தை அத்தாட்சிப்படுத்தக்கூடிய இரண்டு சமீபத்திய நற்சாட்சிப் பத்திரங்கள். இவற்றில் ஒன்று கிராம சேவகரால் வழங்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பதாரரின் நிரந்தர வசிப்பிடம் பற்றிய கிராம சேவகரின் அத்தாட்சிப் பத்திரம்.

5. அரசாங்க ஊழியர்கள் கூட்டுத்தாபனத் தொழிலாளர்கள் உள்ளூராட்சிச் சபைகளின் அங்கத்தவர்கள் ஆகியோர் திடீர் மரண விசாரணை அதிகாரிகளாக நியமனம் பெறத் தகுதியற்றவர்களாவர்.

6. விண்ணப்பம் கிடைத்தது பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

எம். டபிள்யு. எஸ். குணரத்ன,
அரசாங்க அதிபர், புத்தளம்.

கச்சேரி, புத்தளம்,
1969 ம் ஆு மே மீ 25 ந வ.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

**திடீர் மரண விசாரணை அதிகாரி பதவி**

1. விண்ணப்பதாரரின் பெயரும் முழு விலாசமும் (பெரிய எழுத்தில்) : ————.
2. நிரந்தர வசிப்பிடமும் வசித்த காலமும் :————.
3. ............ ல் சரியான வயது. வருடங்கள் : ............ மாதங்கள் : ............ நாட்கள் : ............
   பிறந்த திகதியும் பிறப்பிடமும் :————.
4. விவாகமானவரா, விவாகமாகாதவரா ? :————.

5. கல்வித் தகைமைகள் :————.

6. தற்போதைய தொழில் :————.

7. பொருளாதாரத் தட்டுப்பாடு ஏற்பட்டதுண்டா ? அவ்வாறாயின் விபரங்கள் தருக :————.

8. விண்ணப்பதாரரின் சொத்துக்களின் அளவுகளும் பெறுமதிகளும் : ————.

9. விண்ணப்பதாரர் நீதிமன்றத்தில் ஏதாவது குற்றத்துக்காகத் தண்டிக்கப்பட்டவரா ? ஆமெனில் விபரங்கள் தருக :————.

10. இப்பதவிக்கான வேறு ஏதாவது விசேட தகைமைகளின் விபரங்கள்: ————.

இந்த விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்ட விபரங்கள் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் நான் இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன். இதில் கொடுக்கப்பட்ட ஏதாவது விபரங்கள் பிழையானவையாகவோ அல்லது உண்மையற்றனவையாகவோ காணப்பட்டால், தெரிவுக்கு முன்னர் இத்தவறு கண்டுபிடிக்கப்பட்டால் விண்ணப்பிக்கத் தகுதியற்றவராகக் கருதப்படுவேன் என்பதையும் தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் நஷ்ட ஈடின்றி வேலை நீக்கம் செய்யப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

————
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

6-3—6.6.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,857

## பொலிஸ் திணைக்களம்

### பொலிஸ் வானொலிப் பகுதிக்கு தொழில் நுட்பப் பணியாளரைச் சேர்த்தல்

பொலிஸ் வானொலிப் பகுதிக்கு பின்வரும் தொழில்நுட்பப் பணியாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(1) பிரதான (தலைமை) தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவி.

(2) தொழில்நுட்ப உதவியாளர் பதவிகள் மூன்று :—

விண்ணப்பங்கள் கீழ்காணப்படும் விண்ணப்ப மாதிரிப் பத்திரத்தைப் போன்ற பத்திரத்தில் நிரப்பப்பட்டு 1969 ம் ஆண்டு யூன் மாதம் 30 ம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர், உதவிப் பொலிஸ் கண்காணிப்பாளர், பொலிஸ் போக்குவரத்து அலுவலகம், நாரகன்பிட்டி, கொழும்பு என்ற விலாசத்துக்குக் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். பதிவுத்தபால் அட்டையின் இடது மேல் மூலையில் எந்தப் பதவிக்குரிய விண்ணப்பம் என்று எழுதப்பட்டிருக்க வேண்டும்.

**பிரதான (தலைமை) தொழில் நுட்ப உத்தியோகத்தர்—**

2. **சம்பள விகிதம்**—ரூபா 3,900—ரூபா 6,540 வருடச் சம்பளம்

$$8 \times 18 + 5 \times 240$$

வினைத் திறமைகாண் தடை ரூபா 5,300 க்கு முன் உண்டு. வாடகைப்படி தற்காலிக வாழ்க்கைச் செலவுப் படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப் படி என்பன அரசாங்க ஒழுங்கு விதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

3. **வேண்டிய தகைமைகள்.**—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் பின்வருவனவற்றைத் திருப்திகரமான சான்றுடன் சமர்ப்பிக்கவேண்டும்.

(i) 1969 ம் ஆண்டு யூன் மாதம் 30 ந் திகதியன்று 20 வயதிற்குக் குறையாமலும் 40 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(ii) கீழே குறிக்கப்பட்டவற்றில் ஒன்றிலாவது சித்தியடைந்த தராதரப் பத்திரம் இருக்க வேண்டும் :

(அ) பிரித்தானிய ஸ்தாபனத்தாரால் நடாத்தப்படும் வானொலி இயந்திரவியலில் பகுதி I-II வரையும் சித்தியடைந்தவராகவும், வானொலி அனுப்பும், பெறும் கருவியைப் பேணுதல், பழுது பார்த்தலில் குறைந்தது இரு வருட அனுபவம் வேண்டும் ;

அல்லது

(ஆ) லண்டன் மற்றிக்குலேசன் அல்லது சிரேஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் கணித சாஸ்திரம், பௌதீக சாஸ்திரங்களுடன் சித்தியடைந்தவராகவும், பிரித்தானிய ஸ்தாபனத்தாரால் நடாத்தப்படும் " சிற்றி கெில்று " பரீட்சையில் பின்வரும் பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும் :

(i) வானொலி III ம் பகுதி.

(ii) தந்தி முறைச் செய்தி அனுப்புகை. தரம் II க் குரிய கணித சாஸ்திரம் அல்லது லண்டன் மற்றிக்குலேசன் அல்லது சிரேஷ்ட தராதரப்பத்திரப் பரீட்சைக்குரிய உயர்தர கணித சாஸ்திரத்துடன் வானொலி அனுப்பும், பெறும் கருவியைப் பேணுதல், பழுது பார்த்தலில் குறைந்தது இரு வருட அனுபவமும் வேண்டும்;

அல்லது

(இ) லண்டன் பல்கலைக்கழகத்தின் இன்சமீடியற் பரீட்சையில் பொறியியல் விஞ்ஞானத்தில் சித்தியடைந்தும், அல்லது உயர்தர தராதரப் பரீட்சையில் கணிதம், பௌதீக சாஸ்திரம் பாடங்களுடன் சித்தியடைந்ததுடன் வானொலி அனுப்பும், பெறும் கருவியைப் பேணுதல், பழுதுபார்த்தலில் 5 வருட அனுபவமுள்ளவராகவும் :

அல்லது

மின்னெந்திரவியல் பகுதி I ல் சித்தியடைந்தும் வானொலி அனுப்பும், பெறும் கருவியை பேணுதல், பழுதுபார்த்தலில் அல்லது " இலக்ரோனிக் " ஆய் கூடத்தில் அல்லது வானொலி செய்தி அறிவிப்பீல் தேர்ச்சி. இவற்றில் 5 வருட அனுபவம் வேண்டும்.

4. **வினைத்திறமைகாண் தடை**—வினைத்திறமைகாண் தடை ரூபா 5,340 சம்பளத்தில் இருக்கும். அதற்கு அவரின் வேலையும் நடத்தையும் திருப்திகரமானதாக இருக்கவேண்டும். அத்துடன் " பிரித்தானிய ரேடியோ என்ஜினியறிங் " ஸ்தாபனத்தில் அங்கத்தவராக அல்லது " சிற்றி அன்ட் கில்ற் " ஸ்தாபனம் நடத்தும் லண்டன் பரீட்சையில் வானொலி பகுதி (IV) னும் தொலைச்செய்திப் போக்குவரத்து பகுதி (III) க்குரிய கணிதசாஸ்திரத்தில் சித்தியடைந்தமைக்குரிய சான்றிதழும் இருக்கவேண்டும்.

**தொழில்நுட்ப உதவியாளர்—**

5. **சம்பள விகிதம்**—ரூபா 1,860—ரூபா 3,780 வருடச் சம்பளம்

$$16 \times 120$$

வினைத்திறமைகாண் தடை ரூபா 2,820 க்கு முன். வாடகைப் படி, தற்காலிகவாழ்க்கைச் செலவுப் படி தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப் படி அரசாங்க ஒழுங்கு விதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

6. **வேண்டிய தகைமைகள்**—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் பின்வருவனவற்றை திருப்திகரமான சான்றுடன் சமர்ப்பிக்க வேண்டும்:—

(i) 1969 ம் ஆண்டு யூன் மாதம் 30 ந் திகதி 20 வயதிற்குக் குறையாமலும் 38 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரசாங்கத்தில் வேலை செய்யும் விண்ணப்பக்காரருக்கு வயதுக்கட்டுப்பாடு இல்லை)

(ii) கீழ்க்குறிக்கப்பட்டவற்றில் தகுதியுடையவராக இருக்கவேண்டும்:—

(அ) நேரடி விண்ணப்பக்காரர்—கணிதம், பௌதீகம் பாடங்களுடன் சிரேஷ்ட தராதரப் பத்திரம் அல்லது அதற்குச் சமமான பத்திரத்துடன் " சிற்றி அன்ட் கில்ற் " ஸ்தாபனத்தால் நடாத்தப்படும் லண்டன் சோதனையில் பின்வரும் பாடங்களில் சித்தியடைந்த பத்திரம் வேண்டும்:—

(i) வானொலி.

(ii) தொலைச்செய்தி போக்குவரத்துப் பகுதி II க்குரிய கணிதசாஸ்திரம் அல்லது சிரேஸ்ட தராதரப் பத்திரத்தில் அல்லது அதற்கு சமமான பரீட்சையில் உயர்தர கணிதத்தில் சித்தியும்.

(iii) தொலைச் செய்தி போக்குவரத்துப் பகுதி—தத்துவங்கள் பகுதி II அல்லது வானொலி II அத்துடன் வானொலிக் கருவி; பேணுதல், பழுதுபார்த் தலில் இரு வருட அனுபவமும்;

அல்லது

உயர்கணிதம், பௌதீகம் பாடங்களுடன் சிரேஷ்ட தராதரப் பத்திரம் அல்லது அதற்குச் சமமான பத்திரம் அத்துடன் வானொலிக் கருவி பேணுத, பழுதுபார்த்தலில் 5 வருட அனுபவமும்.

(ஆ) திணைக்கள விண்ணப்பக்காரர்—

" சிற்றி அன்ட் கில்ற் " ஸ்தாபனத்தால் நடாத்தப்படும் லண்டன் பரீட்சையில்

(i) வானொலி

(ii) 2 ம் பகுதித் தேர்வுக்குரியதும், தொலைச் செய்தி போக்குவரத்துப் பகுதி—தத்துவங்கள் பகுதி II க்குரிய கணித சாஸ்திரத்துடன் பொலிஸ் வானொலிப் பகுதியில் வானொலி தொழில்நுட்பப் பணியாளர் பதவியில் 5 வருட நல்ல அனுபவமும் வேண்டும்.

7. **வினைத்திறமைகாண் தடை**—தொழில்நுட்ப உதவியாளரின் சம்பள விகிதத்தின் திறமைகாண்தடை சில குறிக்கப்பட்ட பரீட்சைகளில் சித்தியெய்துதலைப் பொறுத்தது. அப்பரீட்சை பற்றிய விபரம் உத்தியோகத்தில் சேரும்போது அல்லது அதன் பின்னர் தெரிவிக்கப்படும்.

8. **நியமன விதிகள்**—(மேலே கூறிய எல்லாப் பதவிகளுக்கும்) இந்நியமனங்கள் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளம் உடையவையுமாகும். விதவைகள் அனாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிக்குக் கட்டுப் பணங்கள் செலுத்தப்படவேண்டும்.

9. **சேவை நிபந்தனைகள்.**—(i) தெரிவு செய்யப்பட்டோர் அரசாங்க மொழிக் கொள்கைக்கு ஏற்ப புதிதாகச் சேர்ந்தோராகக் கணிக்கப்படுவர்—

(அ) 3 வருடங்களுக்கு தகுதிகாண் நிலையில் வைக்கப்படுவர்.

(ஆ) அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை நடைமுறைக்குக் கொண்டுவரும்முகமாக முன்னமே இயற்றப்பட்ட, அல்லது இனிமேல் இயற்றப்படும் விதிகளுக்கு அமையவும், முக்கியமாக 1956 ம் ஆண்டின் 33 ம் இலக்க அரசாங்க மொழிச் சட்டத்தை அமுலில் கொண்டு வருவதற்கு அமையவும் நடக்கவேண்டிய வராக இருப்பர்.

(இ) தகுதிகாண் நிலையிலிருக்கும் காலத்தில் சிங்கள மொழியில் தேர்ச்சி அடைய வேண்டும்.

(ஈ) வேலையில் நிரந்தரப்படுத்துதல் தகுதிகாண் எல்லை முடிவில் தேவையான சிங்களத் தேர்ச்சிப் பரீட்சையைக் குறிப்பிட்ட காலத்தில் சித்தியடைவதிலும் தங்கியுள்ளது. குறிப்பிட்ட காலத்தில் சிங்களத் தேர்ச்சிப் பரீட்சை சித்தியடையாதுவிட்டால் சம்பள உயர்வு இடைநிறுத்தம் செய்யப்படும். இதற்குப் பின்பு கொடுக்கப்படும் ஆறுமாத காலத்திலும் குறிக்கப்பட்ட சிங்கள தேர்ச்சியில் சித்தியடையாவிட்டால் சம்பள உயர்ச்சி நிறுத்தப்படும். இந்நிறுத்தம் அவர் சிங்களத் தேர்ச்சியில் சித்தியடையும் காலம்வரையும் இருக்கும்.

(உ) தகுதிகாண் எல்லைக்குள் குறிக்கப்பட்ட சிங்கள தேர்ச்சிப் பரீட்சையில் தேர்ச்சியுறுவிட்டால் நிர்வாகப் பிரமாணம் 120, 121ல் உள்ள ஏற்பாட்டின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்.

(2 ம் பிரிவுகள் இ.ஈ.உ. தமிழ் அல்லது சிங்களம் மூலம் சேவையில் சேர்க்கப்பட்டவர்களுக்கு மட்டுமே பொருந்தும்).

(ii) தெரிவு செய்யப்பட்டவர் ஏற்கனவே அரசாங்கத்தில் நிரந்தர மானதும் உபகாரச் சம்பளமுடையதுமான பதவி வகித்திருந்தால் அவர் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பதில்கடமை புரியும்படி நியமிக்கப்படுவார் ;

(ii) தெரிவு செய்யப்பட்டவர்கள் அரசாங்க சேவை அதிகாரச்சபை விதிகளுக்கும், நிதிப் பிரமாணங்கட்கும் நடைமுறைக் கைந்நூலில் உள்ள பிரமாணங்கட்கும், பகுதிக் கட்டளைக்கும், பொலிஸ் ஒழுங்காற்று நடவடிக்கை விதிகளுக்கும் வேறு பொலிஸ் அதிபரினுலோ அல்லது அரசாங்கத்தாலோ காலத்துக்குக்காலம் கொடுக்கப்படும் எந்தக் கட்டளைக்கும் அமைய நடக்கவேண்டியிருக்கும்.

10. விண்ணப்பக்காரர் சான்றிதழ்களின் பிரதிகளை மட்டுமே விண்ணப் பத்துடன் இணைக்க வேண்டும் ; மூலப்பிரதிகளை அனுப்பக்கூடாது.

11. இலங்கை அரசாங்க வர்த்தமானி (கசெற்) I ம் பாகம் II ம் பிரிவின் தொடக்கத்தில் பிரசுரித்திருக்கும் பொது சேவை பதவிகள் நியமனங்கட்குரிய நிபந்தனைகளைப் பார்க்கவும்.

12. விண்ணப்பங்கள் பெற்றுக்கொண்டமை அறிவிக்கப்படும். எந்த விண்ணப்பக்காரரும் முடிவு தேதியிலிருந்து 7 நாட்களுக்குள் பெற்றுக் கொண்டமைபற்றி அறிவுப்புக் கிடையாவிட்டால் உடனே அதுபற்றி உதவி பொலிஸ் கண்காணிப்பாளர், பொலிஸ் போக்குவரத்து அலுவலகம், நரகன்பிட்டி, கொழும்புக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

ஈ. எல். அபயகுணவர்தன,
பொலிஸ் அதிபர்.

பொலிஸ் தலைமைக் காரியாலயம்,
கொழும்பு 1.
1969 ம் ஆண்டு மே மீ 19 ந் உ.

6–7—6.6.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,857.

---

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கைத் தத்துவக் கணக்காளர் கழகப் பரீட்சைக்குப் பயிற்சியளிப்பதற்கு அரசாங்க உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சி வசதி அளித்தல்

தத்துவக் கணக்கராளராகத் தகைமை பெறும் பொருட்டு இலங்கைத் தத்துவக் கணக்காளர் கழகத்தில் பயிற்சி பெறுவதற்கு இவ்வறிவித்தலின் 2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள தகைமைகளையுடையவர்களும் தமது நியமனங்களில் உறுதிப்படுத்தப்பட்டவருமான அரசாங்க உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவழைக்கப்படுகின்றன. 1969 யூலை 1 ஆந் தேதியில் பயிற்சிநெறி தொடங்குகின்றது.

2. **தேவைப்படும் தகைமைகள்.**—(அ) வயது—1969 யூலை 1 ஆந் தேதியில் 35 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

(ஆ) **கல்வித் தகைமைகள்.**—பின்வரும் கல்வித் தகைமைகளில் **ஒன்றை** உடையராயிருத்தல் வேண்டும் :—

(i) கழகத்தினவை அங்கீகரித்த பல்கலைக்கழகமொன்றின் பட்டக் கல்வி ;

(ii) இலங்கை உயர் பாடசாலைத் தராதரப் பத்திரம் ;

(iii) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கியல் டிப்புளோமா ;

(iv) இலண்டன் பல்கலைக் கழக அல்லது இலங்கை பொ. க. த. பரீட்சையில் (உயர்தரம்) இரு தடவைகளுக்கு மேற்படாமல் 4 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ; இவற்றுள் ஒரு பாடம் கணிதமாகவிருத்தல் வேண்டும். அல்லது இலண்டன் பல்கலைக்கழக அல்லது இலங்கை பொ. க. த. பரீட்சையில் (உயர்தரம்) இரு தடைவைகளுக்கு மேற்படாமல் 4 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன், இலண்டன் பல்கலைக்கழக அல்லது இலங்கை பொ. க. த. பரீட்சையில் (சாதாரண தரம்) கணிதத்தில் அல்லது எண் கணிதத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) அரசாங்கத்தின் கீழ் சேவை—

(i) அரசாங்கக் கணக்காளர் சேவையில் அல்லது கணக்குப் பரிசோதனைச் சேவையில் ஓர் உறுப்பினராதல் வேண்டும் ; அல்லது

(ii) 1969 யூலை 1 ஆந் தேதியில் குறைந்தது ஐந்தாண்டுச் சேவையுடன் கழகத்தினவை அங்கீகரித்த பல்கலைக் கழகத்துப் பட்டதாரியாயிருத்தல் வேண்டும் ; அல்லது

(iii) 1969 யூலை 1 ஆந் தேதியில் குறைந்தது ஐந்தாண்டுச் சேவையுடன் இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியில் கணக்கியல் டிப்புளோமா பெற்றிருத்தல் வேண்டும்.

கணக்கு வேலைகளில் அல்லது கணக்குப் பரிசோதனை வேலையில் அல்லது இவ்விரண்டிலும் முன் அனுபவம் உள்ளோர்க்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.

3. **தெரிவு முறை.**—முறையாக நியமிக்கப்பட்ட தெரிவுச் சபையொன்றினுல் நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்படும். நேர்முகப் பரீட்சையின் இடமும் நேரமும் விண்ணப்பிப்போர்க்கு அறிவிக்கப்படும்.

4. **தெரிவு செய்யப்படவுள்ள பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை.**—வசதிக்கேற்ப, 5 பரீட்சார்த்திகளுக்கு மேற்படாமற் பயிற்சி பெறத் தெரிவு செய்யப்படுவர்.

5. **பயிற்சி.**—இலங்கைத் தத்துவக் கணக்காளர் கழகத்தால் பொருந்திப் பயிலுவதற்கு ஒழுங்கு செய்யப்படும். பொருந்திப் பயிலும் காலம் பின்வருமாறு :—

(i) கழகத்தினவை அங்கீகரித்த கல்லைக்கழகப் பட்டதாரிகள் விடயத்தில் 3 ஆண்டு ;

(ii) பிறவிடயங்கள் எவற்றிலும், 4 ஆண்டு.

6. **புலமைப்பரிசில் நிபந்தனைகள்.**—(அ) புலமைப் பரிசில் பெறத் தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்தி ஒருவர், பயிற்சி நெறியை வெற்றிகரமாய் முடித்த பின்னர் பத்து ஆண்டுக் காலத்துக்கு அசாங்கக் கணக்காளர் சேவையில் அல்லது கணக்குப் பரிசோதனைச் சேவையில் (அவ்வாறு வேண்டப்பட்டால்) சேவை செய்ய ஒப்புக்கொண்டு ஓர் உடன்படிக்கை செய்யுமாறு வேண்டப்படுவர்.

(ஆ) கழகத்திற்குக் கட்ட வேண்டிய படிப்புக்குக் கட்டணம், பரீட்சைக் கட்டணம், போதனை நெறிச் செலவுகள், கடிதத் தொடர்பு நெறிச் செலவுகள் ஆகியன அரசாங்கத்தினுல் செலுத்தப்படும். பயிற்சியோடு தொடர்பான பிற இடைநேர் செலவுகளைப் பரீட்சார்த்தியே பொறுத்தல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திக்கு ஈராண்டு முழு வேதன விடுதலையும் பயிற்சியின் மிகுதிக் காலத்திற்கு அரை வேதன விடுதலையும் கொடுக்கப்படும்.

(இ) பின்வரும் நிபந்தனைகளில் எதேனும் ஒன்றின் கீழ் அல்லது பலவற்றின் கீழ் புலமைப்பரிசில் நிறுத்தப்படுதற்கேதுவாகும் :—

(i) ஒரு பரீட்சார்த்தி, தொடக்க விரிவுரைநெறிகளையும் பயிற்சிகளையும் தத்துவக் கணக்காளர் கழக மன்றத்தின் திருத்திற்கேற்ப முடிக்கத் தவறினுல், அத்தகைய சந்தர்ப்பத்தில் பொருந்திப் பயில அனுமதிக்கப்பட மாட்டார்.

(ii) இலங்கைத் தத்துவக் கணக்காளர் கழகப் பிரமாணங்களின்படி பொருந்திப் பயிலும் காலம் முடிவடைகையில் ;

(iii) இலங்கைத் தத்துவக் கணக்காளர் கழகப் பிரமாணங்களின்படி இடைக் காலப் பரீட்சையை, அப் பரீட்சை எடுக்கத் தகுதி பெற்ற ஓராண்டுக்காலத்துள் வெற்றிகரமாய் முடிக்கத் தவறினுல் ;

(iv) தத்துவக் கணக்காளர் கழக (இல. 2) பிரமாணங்கள், 1960 என்பதன் 28 ஆம் பிரமாண ஏற்பாடுகளின் கீழ் குறித்த கழகம் பொருந்திப் பயிலும் காலத்தை நிறுத்தினுல் ;

(v) குறித்த கழகத்தின் 15 (2) ஆம் பிரமாணத்தின் பிரகாரம் குறித்த பரீட்சார்த்தி திருத்திகரமாகக் காணப்படாவிடின்.

(ஈ) (1) ஆம் பிரிவின் கீழ் ஒரு பரீட்சார்த்தி பொருந்திப் பயில அனுமதிக்கப்படாவிடின் அல்லது மேலே (iii) (iv) அல்லது v ஆம் பிரிவின் கீழ் ஒரு பரீட்சார்த்தியின் பொருந்திப் பயிலல் நெறி நிறுத்தப் பட்டால், அன்னரின் புலமைப்பரிசில் நிராகரிக்கப்படும்; அவரின் புலமைப் பரிசில் நிராகரிக்கப்பட்ட தேதிவரை அவரது பயிற்சிகாரணமாய் அரசாங்கத் துக்கு ஏற்பட்ட செலவுகள் யாவும், பயிற்சிக் காலத்தில் அவருக்குச் செலுத்தப்பட்ட சம்பளமும் படிகளும் அவரால் அரசாங்கத்துக்குத் திருப்பிக் கொடுக்கப்படல் வேண்டும்.

7. விண்ணப்பங்கள் யாவும், இத்துடன் இணைத்துள்ள படிவத்தில் முற்றாக நிரப்பப்பட்டு, திறைசேரியின் மேலதிகச் செயலாளர், (கிளை "ஜி"), பொதுத்திறைசேரி, கொழும்பு என்னும் முகவரியை 1969 ஜூன் 16 ஆந் தேதியன்றோ அதன் முன்னரோ சென்றடையுமாறு அனுப்பப் படல் வேண்டும்.

8. விண்ணப்பக்காரர் சேவை செய்யுந் திணைக்களத் தலைவர்க்கூடாக எல்லா விண்ணப்பங்களும் அனுப்பப்படல் வேண்டும்.

9. எல்லா விண்ணப்பங்களையும் பெற்றுக்கொண்டமை ஒப்புக்கொளப் படும். எந்த விண்ணப்பக்காரரும் முடிவுத் தேதியிலிருந்து மூன்று நாட்களுக்குள் ஒப்புக் கோடல் பெருவிடின் அதுபற்றித் திறைசேரியின் மேலதிகப் பிரதிச் செயலாளருக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

பி. டி. உடுவெல,
திறைசேரி மேலதிகப் பிரதிச் செயலாளர்.

பொதுத் திறைசேரி,
கொழும்பு,
1969 ம் ஆண்டு மே மாதம் 30 திகதி,
958/1/166 (ஜி) (XI).

7 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவம்

**இலங்கைத் தத்துவக் கணக்காளர் கழகப் பரீட்சைகளுக்குப் பயிற்சி பெறுவதற்கு அரசாங்க உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சி வசதி அளித்தல்**

1. முழுப் பெயர் :————
   (அ) குடும்பப் பெயர் :————.
   (ஆ) பிற பெயர்கள் :————.
2. அஞ்சல் முகவரி :————.
3. பிறந்த தேதி :————.
4. கல்வித் தகைமைகள் :————.
5. நியமனம் பற்றிய விவரங்கள் :————.
   (அ) திணைக்களம் :————.
   (ஆ) தற்போதைய பதவி :—
   (இ) நிரந்தரச் சேவையில் முதல்நியமித்த தேதி :————.
   (ஈ) வகித்த பிற பதவிகள் :————.
   (உ) தற்போதைய பதவியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளாராவென பது :————.
   (ஊ) நிரந்தரச் சேவைக் காலம் :————.
6. விசேட உரிமைக் கோரிக்கைகள் எவையேனும் பற்றிய விவரங்கள் :

————
விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

தேதி :————.

திணைக்களத் தலைவர் விதப்புரைகள் (விண்ணப்பங்களை திணைக்களத் தலைவர்களே அனுப்பும் போது 3, 5 ஆம் கூடுகளிலுள்ள விவரங்கள் சரி யானவையோவென அத்தாட்சிப்படுத்துவதுடன் விண்ணப்பக்காரரின் வேலையும் நடத்தையும் திருத்திகரமானவையாவெனவும் கூறுதல் வேண்டும்).

————
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

தேதி :

6—214—6.6.69 ந் தேதிய வர்த்தமானி இல. 14,857

---

## ஆசுபத்திரி எழுதுவினைஞர் சேவையின் நிறைவேற்றும் எழுதுவினைஞர் வகுப்பின் II ஆந் தரத்துக்குப் பதவி உயர்ச்சி அளிப்பதற்கான பரீட்சை—ஒக்ரோபர், 1969

ஆசுபத்திரி எழுதுவினைஞர் சேவையின் நிறைவேற்றும் எழுதுவினைஞர் வகுப்பின் II ஆந் தரத்துக்கு உயர்ச்சி அளித்தற்கான போட்டிப் பரீட்சையொன்று பரீட்சை ஆணையாளரால் 9.10.1969 ஆந் திகதியன்று சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் கொழும்பில் நடாத்தப் படும்.

2. பெறுபேறுகளைப் பிரசுரித்தலும், காலித் தானங்களின் எண் ணிக்கையும்—சித்தியெய்தும் பரீட்சார்த்திகளின் பெயர்கள் அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையிற் பிரசுரிக்கப்படும். இந்தப் பரீட்சைப் பெறு பேறுகளின்படி நிரப்பப்படவுள்ள காலித்தானங்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 40. போதிய தொகையினரான அபேட்சகர்கள் தேவையான குறைந்த தரத்தை அடையாவிடில், காலித்தானங்களிற் சில நிரப்பாமல் விடப்படக்கூடும்.

3. **சம்பளமும், சேவை நிபந்தனைகளும்.**—12.7.1968 ஆந் திகதிய 14,810 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையிற் பிரசுரிக்கப் பட்ட ஆசுபத்திரி எழுதுவினைஞர் சேவை சம்பந்தமான பிரமாணக் குறிப்பைப் பார்க்க.

4. **தகவுத்திறன்.**—(அ) ஆசுபத்திரி எழுதுவினைஞர் சேவையின் பொது எழுதுவினைஞர் வகுப்பில் உள்ளவர்களும் பின்வரும் தேவை களைப் பூர்த்தி செய்பவர்களுமான எழுதுவினைஞர்கள் இப்பரீட்சையை எடுப்பதற்குத் தகுதியுள்ளவர்களாவர் :—

(i) தங்கள் நியமனங்களில் உறுதிப்படுத்தப்பட்டவர்களாகவும், பரீட்சை எந்த நிதியாண்டின் சார்பில் நடாத்தப்படுகிறதோ அந்த நிதியாண்டின் ஒக்ரோபர் மாதம் 1 ஆந் திகதிக்கு உடனடுத்து முந்திய 4 வருடங்கள் (அதாவது 1.10.67 இல்) தொடர்ச்சியாகவும், திருப்திகரமாகவும் சேவை செய்தவர் களாக்வும் ;

(ii) கடைசிச் சம்பள ஏற்றத்துக்குப் பின்னர் ஒரு வார காலச் சம்பளத்தைக் குற்றமாகச் செலுத்திய அல்லது கண்டிக்கப்பட்ட தண்டனைக்கு மேற்படாத கடுந் தண்டனைக்கு ஆளாகாதவர் களாகவும் இருப்பவர்கள்.

**குறிப்பு.**—ஆசுபத்திரி எழுதுவினைஞர் சேவையில் இல்லாத உத்தி யோகத்தர்கள் இந்தப் பரீட்சைக்குத் தோற்றத் தகுதியுடையோராகார்.

5. **விண்ணப்பங்கள்.**—(i) இப்பரீட்சைக்கு அனுமதிப்பதற்குரிய விண் ணப்பத்தின் மாதிரிப் பத்திரம் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டிருக் கிறது. விண்ணப்பகாரர்கள் தமது விண்ணப்பங்களை முழுத் தாளின் அரைத் தாளில் (வேறு எந்த அளவுப் பத்திரத்திலுமின்றி) தயாரித்தல் வேண்டும். இந்நோக்கத்திற்கு ஒரு தாளையே உபயோகித்தல் வேண்டும். குறித்த பத்திரத்தின் முதலாம் பக்கத்தில் 1–6 வரையுள்ள கூடுகள் முதற் பக்கத்திலும் பன்முனைப்படுத்தப்பட்ட கூற்றுத் தலைவரின் சான்றிதழும் அவரின் அத்தாட்சிப் பத்திரமும் இரண்டாம் பக்கத்திலு மிருத்தல் வேண்டும். இப்பத்திரங்களைத் தட்டெழுத்திலும் தயாரிக்கலாம் ; ஆனுல், அது பரீட்சார்த்தியின் சொந்தக் கையெழுத்தில் தெளிவாகவும், சரியாகவும் நிரப்பப்படல் வேண்டும்.

(ii) விண்ணப்பங்கள் பன்முனைப்படுத்தப்பட்ட கூறுகளின் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும் ; அத்துடன் அவர்களின் திருப்தி கரமான சேவை பற்றிய சான்றிதழ்களும் அனுப்பப்படல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பப் பத்திரமும் எல்லா வகையிலும் பூரணமாகவும் திருப்திகரமாகவும் இருக்கின்றதோ எனவும், அவ்விண்ணப்பப் பத்திரத் துடன் இணைத்துள்ள சான்றிதழ்களில் தாம் கையெழுத்திட்டு இருக் கின்றார்களோவெனவும் பன்முனைப்படுத்தப்பட்ட கூறுகளின் தலைவர்கள் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். தகுதி பெற்ற பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்களை அவர்கள் பதிவுத் தபால் மூலம் சௌக்கிய சேவைப் பணிப்பாளர், தபாற் பெட்டி இல. 500, கொழும்பு என்னும் விலாசத் திற்கு, 15.7.1969 ஆந் திகதியன்றோ அதற்கு முன்னரோ அனுப்புதல் வேண்டும். அந்தத் திகதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

6. **பரீட்சைக்கு அனுமதி.**—(i) அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்களுக்குரிய பரீட்சார்த்திகளுக்குச் சௌக்கிய சேவைப் பணிப்பாளர் அனுமதி அட்டை களை வழங்குவார். இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் மேற்பார்வை உத்தியோகத்தரிடம் தமது அனுமதி அட்டைகளைக் காட்டுதல் வேண்டும். இவ்வனுமதி அட்டைகளின்றி அவர்கள் பரீட்சைக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

(ii) பரீட்சார்த்திகளுக்குத் தனித்தனியாக நேரசூசி வழங்கப்படமாட் டாது. இவ்வறிவித்தலின் ஒன்பதாம் பந்தியில் கொடுக்கப்பட்டிருக்கும் நேரசூசியைப் பரீட்சார்த்திகள் குறித்துக்கொள்ள வேண்டும்.

(iii) பரீட்சை நடாத்துவதைப்பற்றிப் பரீட்சை ஆணையாளரினுல் விதிக் கப்பட்ட விதிகளுக்கும், பிரமாணங்களுக்கும் பரீட்சார்த்திகள் கட்டுண்ட வராவர். இவ்விதிகளையும் பிரமாணங்களையும் மீறுபவர்கள் அன்னரினுல் விதிக்கப்படும் எந்தத் தண்டனைக்கும் ஆளாவர்.

(iv) இவ்வறிவித்தலின் முடிவில் பரீட்சார்த்திகளின் விதிகளும் பிர மாணங்களும் வேருக அச்சிடப்பட்டுள்ளன.

7. **அரசாங்க உத்தியோகத்தர்கள் பரீட்சை எடுப்பதற்கு விடுதலை.**—சௌக்கிய சேவைப் பணிப்பாளரினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களுக்குரியவர்களாகத் தத்தம் பெரும்பாகங்களில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு இப்பரீட்சை எடுப்பதற்காகக் கடமை விடுதலைபோல் விடுதலை வழங்கப்படும்படி பன்முனைப்படுத்தப்பட்ட கூறுகளின் தலைவர்கள் கேட்கப்படுகிறார்கள். பயணச் செலவுகள் கொடுக்கப்படமாட்டா.

8. **பரீட்சைத் திட்டம்.**—பரீட்சைக்கான பாடங்களும், ஒவ்வொரு பாடத்துக்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளும், இதன் கீழ் தரப்படுகின்றன. சகல விடைத்தாள்களிலும் கூடாத கையெழுத்துக்கும், எழுத்துக்கூட்டற் பிழைகளுக்கும் புள்ளிகள் கழிக்கப்படும். தெளிவற்ற முறையில் எழுதும் பரீட்சார்த்திகள் தகைமை நீக்கஞ் செய்யப்படப் பாத்திரராவர்.

| | புள்ளிகள் |
|---|---|
| 1. கணக்குகள் (எக்கவுண்ஸ்) (ஒன்றரை மணித்தியால விஞப் பத்திரம்)<br>இந்த விஞப் பத்திரம் கணக்குகள், குறுக்கு நெடுக்குக் கூட்டல்கள் (றொட்ஸ்), ஆரம்ப கணக்குப் பதிவியல் (எலிமென்ரறி புக்கீப்பிங்) முதலியவற்றில் விஞக்களைக் கொண்டிருப்பதுடன் இலக்கங்களைப் பிழையின்றிக் கையாளுவதில் உள்ள திறமை, கணக்குகள் பற்றிய சாதாரண அடிப்படைப் பிரமாணங்களின் அறிவு என்பவற்றைச் சோதிக்கும் வகையிலும் அமையும். இப்பாடம் பற்றிய நிதிப் பிரமாணங்களின் அறிவு, திணைக்கள விதிகள் என்பன அவசியம் .. .. .. | 100 |
| 2. ஆசுபத்திரி நிருவாக நடைமுறை, அலுவலக முறைமைகள் என்பன பற்றிய பிரமாணங்கள் (இரண்டு மணித்தியாலங்கள்) இந்த விஞப்பத்திரம் ஒரு எழுதுவினைஞரென்ற முறையில் ஒரு உத்தியோகத்தரின் உபயோகத்தையும், அவரது திறமையையும் சோதிக்கும் வகையில் தயாரிக்கப்படும். அரசாங்க சேவை அதிகாரசபை விதிகள், நடைமுறைக் கைந்நூல் பிரமாணங்கள், பகுதி (திணைக்கள) விதிகள் அல்லது பிரமாணங்கள் முதலியன பற்றிய அறிவு அவசியம் .. .. .. | 200 |

**குறிப்பு.**—(i) ஆசுப்பத்திரி எழுதுவினைஞர் சேவையில் சேருவதற்கான போட்டிப் பரீட்சைக்கு எந்த மொழியில் தோற்றினார்களோ அதே மொழியிலேயே பரீட்சார்த்திகள் இந்த இரண்டு விஞப் பத்திரங்களுக்கும் விடையெழுத வேண்டும். போட்டிப் பரீட்சையில்லாமல் ஆரம்பத்தில் சேர்த்துக்கொண்டவர்களின் விடயத்தில், சேவையில் சேருவதற்கு ஒரு உத்தியோகத்தர் எந்த மொழியில் தகைமை பெற்றிருந்தாரோ அதே மொழியில் இவற்றுக்கு விடை எழுத வேண்டும். இந்த இரண்டு வகுதிகளிலும் அடங்கும் உத்தியோகத்தர்கள் விரும்பினால் தமது இட்டப்படி இந்த இரண்டு விஞப் பத்திரங்களுக்கும் அரசகரும மொழியில் (சிங்களத்தில்) விடை எழுதலாம்.

அரசகரும மொழிக் கொள்கையின் நோக்கங்களுக்காக முன் சேர்ந்தவர்களாக (ஓல்ட் என்றன்ற்) கருதப்படுபவர்களும், ஆங்கில மொழி மூலம் சேர்க்கப்பட்டவர்களுமான உத்தியோகத்தர்கள் இந்த இரண்டு விஞப்பத்திரங்களுள் ஒவ்வொன்றுக்கும் முற்றுகச் சிங்களத்தில் அல்லது ஆங்கிலத்தில் விடையெழுதலாம்.

(ii) இது ஒரு போட்டிப் பரீட்சையெனினும், இந்த விஞப் பத்திரங்களில் ஒவ்வொன்றுக்கும் குறைந்தது 35 சத வீதமான புள்ளிகளையும், இரண்டு விஞப் பத்திரங்களுக்கும் சராசரி 40 சத வீதமான புள்ளிகளையும் பெற வேண்டுமென்று பரீட்சார்த்திகள் கோரப்படுவர்.

| | புள்ளிகள் |
|---|---|
| 3. சிங்களம் அல்லது தமிழ்— | |
| (அ) ஒன்றரை மணித்தியால எழுத்துமூல விஞப்பத்திரம் .. .. .. | 100 |
| (ஆ) வாய்மொழிப் பரீட்சை .. .. | 100 |

அந்த எழுத்துமூல விஞப்பத்திரத்தில் பின்வருவனவற்றையிட்ட அப்பியாசங்கள் அடங்கும்—

(i) சாதாரண வாக்கியப் பந்தியொன்றைச் சுருக்கி எழுதுதல்.

(ii) பின்வரும் மாதிரிகளைச் சார்ந்த வியாசங்களில் ஒரு வியாசம் அல்லது அதற்கு மேற்பட்ட வியாசங்கள் :—

விவரணம், சம்பாஷணை, கடிதம் எழுதுதல்.

(iii) மொழிபெயர்த்தல் (அ) வசனங்களைச் சிங்களத்தில் அல்லது தமிழில்.

(ஆ) ஒரு உரைநடைப் பந்தியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தல்.

(iv) சொற்களின் கருத்து, செயற்பாடு, தொடர்பு என்பனவும் சொற்றொடர்கள், வாக்கியங்கள், பிழைகள் ஆதியனவும்.

**கவனிக்க.**— (i) இந்தப் பரீட்சை பரீட்சார்த்திக்கு மொழியில் வேலை செய்யும் அறிவிருக்கிறதா என்பதைச் சோதிப்பதற்கான ஒரு தரத்தில் அமையும்.

(ii) (1) ஆம், (2) ஆம் பாடங்கள் இரண்டையும் ஒன்ருகக் கூட்டி அவற்றில் ஒரு குறிப்பிட்ட குறைந்த பட்ச மொத்தப் புள்ளிகளுக்கு அதிகமாகப் பெறும் பரீட்சார்த்திகள் இந்தப் பாடத்தில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். அத்தகைய பரீட்சார்த்திகள் தெரிவு செய்யப்படுதற்கான தகுதியை அடைவதற்கு சிங்களம் அல்லது தமிழில் நடைபெறும் எழுத்துப் பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் ஒதுக்கப்பட்ட மொத்தப் புள்ளிகளில் குறைந்தது 35 சதவீதமான புள்ளிகளைப் பெறுதல் வேண்டும். எனினும், இந்தப் பாடத்தில் பெறும் புள்ளிகள், சிறப்புத் திறமை வரிசைக் கிரமத்தைத் தீர்மானிப்பதற்குக் காரணமாகக் கொள்ளப்படமாட்டா.

(iii) இரண்டு விஞப்பத்திரங்களுக்கும் அதாவது (1) கணக்குகள் (2) பிரமாணங்கள், நடைமுறைகள், அலுவலக முறைமைகள் ஆகிய இரண்டு விஞப்பத்திரங்களுக்கும் சிங்களத்தில் அல்லது தமிழில் விடையெழுதும் பரீட்சார்த்திகள் சிங்களம் அல்லது தமிழ் என்ற (3) ஆம் பாடத்துக்கு விடை எழுதுவதிலிருந்து விதிவிலக்களிக்கப்பெறுவர்.

(iv) கீழ்க்காணும் தகைமைகளில் ஏதாவதொன்றைக் கொண்ட பரீட்சார்த்திகளும் சிங்களம் அல்லது தமிழ்ப் பாடத்திலிருந்து விதிவிலக்களிக்கப் பெறுதற்குத் தகுதியுடையோராவர்.

சிங்களத்திலிருந்து விதிவிலக்குப் பெறுவதற்கு—

(அ) பொதுத் திறைசேரியின் உயர்தரச் சிங்களத் தேர்ச்சிப் பரீட்சையில் சித்தி.

(ஆ) சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் (சிங்களம்).

(இ) சிங்களப் பாஷை, தற்காலச் சிங்களம், சாஸ்திரிய சிங்களம் என்பவற்றில் ஒன்றை ஒரு பாடமாகக் கொண்ட (ஆங்கில) சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரம்.

(ஈ) இலங்கைக் கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர)ப் பத்திரம். சிங்கள மொழிப் பாடத்திட்டம் " ஏ " அல்லது " பி ".

(உ) 1964 மார்ச் 24 ஆந் திகதிய 640 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கையிற் குறிப்பிடப்பட்டுள்ள சிங்களத் தேர்ச்சிப் பரீட்சையின் IV ஆம் தரத்திற் சித்தி.

தமிழிலிருந்து விதிவிலக்குப் பெறுதற்கு—

(அ) பொதுத் திறைசேரியின் உயர்தரத் தமிழ்த் தேர்ச்சிப் பரீட்சையிற் சித்தி.

(ஆ) சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் (தமிழ்).

(இ) தமிழ்ப் பாஷையை ஒரு பாடமாகக் கொண்ட (ஆங்கில) சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரம்.

(ஈ) இலங்கைக் கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர)ப் பத்திரம். தமிழ்மொழிப் பாடத்திட்டம் " ஏ " அல்லது " பி ".

9. **பரீட்சையின் நேரசூசி பின்வருமாறு :—**

| | |
|---|---|
| மு.ப. 9.00—மு.ப. 11.00 .. | ஆசுப்பத்திரி நிருவாகம், அலுவலக முறைமைகள் பற்றிய பிரமாணங்கள் |
| பி.ப. 1.00—பி.ப. 2.30 .. | கணக்குகள் |
| பி.ப. 2.45—பி.ப. 4.15 .. | சிங்களம்/தமிழ் |

நேர்முகப் பரீட்சைக்குத் தகுதிபெறும் எல்லாப் பரீட்சார்த்திகளுக்கும் அப்பரீட்சைக்குரிய தேதி, நேரம், இடம் ஆகியவற்றைப் பரீட்சை ஆணையாளர் புறம்பாக அறிவிப்பார்.

வி. பி. ஏ. பெரேரா,
பிரதி அதிபதி (நிருவாகம்),
சௌக்கிய சேவை அதிபதிக்காக.

சௌக்கியத் திணைக்களம், கொழும்பு,
1969 ம் ஆண்டு மே மீ 26 ந் உ.

விண்ணப்பத்தின் மாதிரிப் பத்திரம்

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**ஆசுப்பத்திரி எழுதுவினைஞர் சேவையின் நிறைவேற்றும் எழுதுவினைஞர் வகுப்பின் II ஆந் தரத்துக்குப் பதவி உயர்ச்சி அளிப்பதற்கான பரீட்சை—ஒக்ரோபர், 1969**

உமது வழமையான கையொப்பம் :————.

(விண்ணப்பகாரர் அத்தாட்சிப்படுத்துபவர் முன்னிலையில் கையொப்பமிடல் வேண்டும்)

1. (அ) எல்லாப் பெயரும் முழுமையாக :————.
   (ஆ) தற்போதைய நியமனம் :————.
   (இ) உத்தியோக விலாசம் :————.
2. பிறந்த திகதி :————.
3. நீர் இலங்கையரா எனவும், சிங்களவரா, இலங்கைத் தமிழரா, பறங்கியரா, பிறரா எனவுங் கூறுக :————.
4. (i) ஆசுப்பத்திரி எழுதுவினைஞர் சேவையின் பொது எழுதுவினைஞர் வகுப்பில் சேர்ந்த திகதி :————.
   (ii) ஆசுப்பத்திரி எழுதுவினைஞர் சேவையில் 1.10.67 ஆந் திகதியன்று எத்தனை ஆண்டுகள் சேவை முடித்துள்ளீர் ? : ————.
   (iii) உமது நியமனத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளீரா ? :————.
   (iv) (அ) அரசாங்க மொழிக் கொள்கை நோக்கத்துக்காக நீர் முன்னர் சேர்ந்தவரா, புதிதாகச் சேர்ந்தவரா ? :————.
   (ஆ) ஆசுப்பத்திரி எழுதுவினைஞர் சேவைக்கு என்ன மொழி மூலம் சேர்க்கப்பட்டீர் ? :————.
5. அறிவித்தலின் 8 (3) ஆம் பந்தியின் கீழ் நீர் என்ன பாடம் எடுக்கின்றீர்—சிங்களம் அல்லது தமிழ் :————.
6. சிங்களத்திலிருந்து/தமிழிலிருந்து விலக்குப்பெற உரிமையுடையவராயின் வர்த்தமானியின் அறிவித்தலின் 8 ஆம் பந்தியின் (iii) அல்லது (iv) ஆம் குறிப்பின் கீழ் அவ்வித உரிமை கோரப்படுகின்றதா என்று விவரம் குறிப்பிடுக. (iv) ஆம் குறிப்பின் கீழாயின் பின்வருவனவற்றைக் கூறுக :—
   (அ) பரீட்சைப் பெயர் :————.
   (ஆ) பரீட்சை ஆண்டும் மாதமும் :————.
   (இ) சுட்டிலக்கம் :————.
   (ஈ) சிங்களத்தில்/தமிழில் சித்தியெய்திய பாடங்கள் :————.
   (உ) தேர்ச்சிப் பரீட்சையின் மொழியும் தரம் அல்லது படியும் (சிங்களம்/தமிழ்) :————.

**பன்முனைப்படுத்தப்பட்ட கூற்றுத் தலைவரின் சான்றிதழ்**

(1) இவ்வுத்தியோகத்தர் ஆசுப்பத்திரி எழுதுவினைஞர் சேவையின் பொது எழுதுவினைஞர் வகுப்பில் எழுதுவினைஞராயுளர் எனவும், ........ 1969 ஆந் திகதிய இலங்கை அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் இப்பரீட்சையெடுக்கத் தகுதியுடையவரெனவும், நான் அத்தாட்சிப்படுத்துகிறேன். அவரின் வேலையும் நடத்தையும் திருத்திகரமானவை.

(2) 4 ஆம், 6 ஆம் கூடுகளில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் சரிபார்க்கப்பட்டு, சரியெனக் காணப்பட்டன.

..................................
பன்முனைப்படுத்தப்பட்ட கூற்றுத் தலைவரின் கையொப்பம்.

..................................
பதவிப் பெயர்

திகதி :————.

**அத்தாட்சிப்படுத்தல்**

பரீட்சார்த்தியின் கையொப்பமும், தேதியும்.—

**குறிப்பு.**—தனது பன்முனைப்படுத்தப்பட்ட கூற்றுத் தலைவர் முன்னிலையில் அல்லது அத்தகைய பன்முனைப்படுத்தப்பட்ட கூற்றுத் தலைவர் சார்பில் கையொப்பமிட அங்கீகாரம் பெற்ற ஒரு உத்தியோகத்தர் முன்னிலையில் அல்லது தனது நேரடியான தலைவர் முன்னிலையில் பரீட்சார்த்தி கையொப்பமிடல் வேண்டும்.

திரு. ..................................................
என்பவர் எனது அலுவலக உத்தியோகத்தர் எனவும், அவரை நான் நன்கு அறிவேன் எனவும், அவர் எனது முன்னிலையில் 1969 ஆம் ஆண்டு .................... மாதம் .................... நாளில் கையொப்பமிட்டார் எனவும் நான் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம் :————.

பெயர், பதவி, நிலை :————.

விலாசம் :————.

## பரீட்சைப் பகுதி, இலங்கை

**பரீட்சார்த்திகள் கவனிக்கவேண்டிய விதிகள்**

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்து கொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சாதிகாரியின் விரசின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்:—

(i) முழுப் பரீட்சையிலிருந்தும் நிறுத்தி வைக்கப்படுவர் அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் ஒரு பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்.

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்.

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம் வரை பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமற் தடுத்து வைக்கப்படுவர்.

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விஷயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்து விடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும் பொழுதோ, பரீட்சைக்குப் பின்னரோ, தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால்—அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும் அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம், அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

**விதிகள்**

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் பொழுதும் வெளியேறும் பொழுதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்திற் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்தினுள்ள மற்றப் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக் கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையை விட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக் கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமுஞ் செய்யக் கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந் தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடையெழுதுந் தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ் விதிக்கு மாறாக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எந்தச் சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்த பின்னர்தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேகவும் அனுமதிக்கப்படுவர் ; செய்கைமுறை அல்லது வாய்மொழிப் பரீட்சையைப் பொறுத்தவரையில் தாமதித்து வந்த ஒரு பரீட்சார்த்தியை, மேறபார்வையாளர் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப்புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலும் சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியனவற்றை ஒழுங்காகக் கீறிவிட வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும், வெளியே எடுத்துச் செல்ல ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கான எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகளிருந்தால் சித்திரத்தில் அலங்காரரூபச் சித்திரமும் கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக்கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ கணிதக் கருவிப்பெட்டியையோ விட கைப்பை, அழகு செய் செப்பு, பார்சல் முதலியவற்றை கோவை அட்டை, கடதாசிமட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி மடித்த புதினப் பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப் பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்குள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்துள்ளிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகமோ குறிப்புகளோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்குத் தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தை விட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பங்களிலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால், பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும்மீண்டு வரும்பொழுதும் சோதிக்கப்படுவர்.

14. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக் கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறெவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின் கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக்கூடாது.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியெனஉறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் ஒரு பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

**பரீட்சார்த்திகளுக்கு :**

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக் கருதி மேல்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும் :—

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்கக் குறைந்தபட்சம் 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாகப் பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன் நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதியைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்கு முன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். அல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடங்களுக்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக் கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப் பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப் பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடின் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படக்கூடும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத் தாள், கணனரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால், அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டு விடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுபட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக் கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதிசெய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதும் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவும் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில், ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக் கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில், வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலது பக்கத்து அடைப்பு பரீட்சகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் எற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமான கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளின் முறையான அமைப்பு முறையில் தருக. வரைப்படங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைப்படத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறு படத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளின் மறுபக்கத்திலும் தொடரப்படுமானால், அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி **நெருக்கமாகவும் உறுதியாகவும்** ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் **(வலதுபக்க மேல் மூலையிலன்று)** உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற்போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லை யென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகனிடமோ பணியாளிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக் காட்ட வேண்டும்.

கே. ரீ. டபிள்யு. சுமணசூரிய,
பதில் பரீட்சாதிகாரி.

பரீட்சைப் பகுதி,
மலே வீதி, கொழும்பு 2.

6–107—6.6.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,857

---

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### அரசினர் கலை, கலைப்பணிக் கல்லூரிக்கு மாணவர்களைச் சேர்த்தல்

அரசினர் கலை, கலைப்பணிக் கல்லூரியில் 1969/70 ஆம் கல்லூரி ஆண்டில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு ஆண்கள், பெண்கள் இடமிருந்து (இரு பாலாரிடமுமிருந்து) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **பயிற்சி நெறிகள்—(அ) பகல் நேரப் பயிற்சி நெறிகள்.**—இப்பயிற்சி நெறிகளைப் பின்பற்றும் மாணவர்கள் முதல் மூன்று வருடம் வரைதலிலும் ஓவியத்திலுமான ஒரு பயிற்சி நெறியைப் பின்பற்ற வேண்டும். மூன்றும் வருட முடிவில் நடைபெறும் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு வரைதலிலும் ஓவியத்திலுமான மூன்று வருட பயிற்சி நெறித் தராதரப் பத்திரம் வழங்கப்படும். 4 ம், 5 ம் வருடங்களில் மாணவர்க்கு ஏற்ற ஒரு பயிற்சி நெறியில் உயர்தர பயிற்சி அளிக்கப்படும். 5 ம் வருட முடிவில் நடைபெறும் இறுதிப் பரீட்சையில் சித்தியடைவோருக்கு அவர்கள் பின்பற்றிய பயிற்சி நெறிகளில் டிப்ளோமாப் பத்திரம் வழங்கப்படும். இப்பயிற்சி நெறிகள் அண்மையில் திருத்தி அமைக்கப்படக்கூடுமென்பதைக் கவனிக்கவும்.

**(ஆ) பின்னேரப் பயிற்சி நெறிகள்.**—ஒளிப்படவியல் துறையில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தாபனத்தில் ஒழுங்காக வேலைக்கு அமர்த்தப்பட்டிருப்போர் அல்லது தொழில் பயில்வோர் பின்பற்றக்கூடியதான இரு வருட ஒளிப்படவியல் பயிற்சி நெறி ஒன்று நடைபெறும்.

3. **தகைமை.**—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் தகைமைகள் உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்ட வேண்டும் :—

(அ) இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும் ;

(ஆ) நற்குணம் உடையவராய் இருக்க வேண்டும் ;

(இ) 1.10.69 அன்று 16 வயதுக்குக் குறையாதவராயும் 25 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். 21 வயதுக்குட்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு முதன்மை அளிக்கப்படும். பின்னேர பயிற்சி நெறிக்கு அனுமதி கோருவோருக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது ;

(ஈ) சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது க.பொ.த. (சாதாரணதர) பத்திரப் பரீட்சையில், இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி சிங்கள/தமிழ் மொழி, எண்கணிதம் அல்லது கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

**குறிப்பு.**—பகல்நேரப் பயிற்சி நெறிக்கு அனுமதி கோருவோர் வரைதலில் திறமைச் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

4. **சேர்வுப் பரீட்சை.**—ஒரு செயல்முறை/எழுத்து மூலப் பரீட்சை அல்லது இவ்விரு பரீட்சைகள், ஒரு நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் பெறுபேறுகளைக் கொண்டே மாணவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். எழுத்துமூலப் பரீட்சைக்கும் செயல்முறைப் பரீட்சைக்கும் வேண்டிய காகிதாதிகளையும் ஏனைய பொருட்களையும் விண்ணப்பதாரிகளே கொண்டுவர வேண்டும்.

5. **புகவிடுதல் அட்டைகளும் நேரசூசிகளும்.**—பரீட்சைக்கான புகவிடுதல் அட்டைகளும் நேரசூசிகளும் தகுதியுடைய மாணவர்களுக்கு, சேர்வுப் பரீட்சை ஆரம்பித்தற்கு ஏறக்குறைய இரு வாரங்களுக்கு முன் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். பத்திரிகைகளில் வெளியிடப்படும் ஒரு விளம்பரம் மூலம் பரீட்சைத் திகதி அறிவிக்கப்படும். புகவிடுதல் அட்டையை பரீட்சைத் திகதிக்கு 7 நாட்களுக்கு முன் பெறத்தவறும் விண்ணப்பதாரிகள் கல்லூரி அதிபருக்குப் பின்வரும் விபரங்களைக் கொடுத்து தந்தி மூலம் அறிவிக்க வேண்டும் :—

(அ) விண்ணப்பதாரியின் பெயர் ;

(ஆ) தபாற் கந்தோர் ;

(இ) விண்ணப்பம் அனுப்பப்பட்ட பதிவுக் கடித இலக்கமும் திகதியும்.

6. **கட்டணங்கள்.**—இக்கல்லூரியில் படிப்பவர்களிடமிருந்து எவ்வித கட்டணமும் அறவிடப்பட மாட்டாது.

7. **விண்ணப்பங்கள்.**—அரசினர் கலை, கலைப்பணிக் கல்லூரி அதிபரிடமிருந்து (விலாசம் : இலக்கம் 46, ஹோட்டன் பிளேஸ், கொழும்பு 7) பெற்றுக் கொள்ளக்கூடியதான படிவத்தில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு 1969 ம் ஆண்டு ஜூன் மாதம் 30 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அவருக்கு அனுப்பப்பட வேண்டும். உரிய திகதிக்குப் பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. விண்ணப்பப் படிவங்கள் கல்லூரியிலிருந்து 20.6.69 வரை பெற்றுக் கொள்ளப்படலாம். விண்ணப்பப் படிவங்களைத் தபால் மூலம் பெறவிரும்புவோர் அதற்கான வேண்டுகோளுடன் தமது விலாசமிடப்பட்டதும் முத்திரை ஒட்டப்படாததுமான ஒரு நீண்ட காகித உறையை அனுப்ப வேண்டும். பூரணமற்ற அல்லது குறைபாடான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படக்கூடும்.

சீ. ஜே. சேராசிங்க,
பதில் மகா வித்தியாதிபதி.

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
1969 ம் ஆண்டு ஜூன் மாதம் 2 ஆந் திகதி.

6-279—6.6.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,857

## கமத்தொழில் இலாகா

### கமத்தொழிற் பாடசாலை சான்றிதழ் பயிற்சி

கமத்தொழிற் பாடசாலையில் சேர்ந்து கமத்தொழில் சான்றிதழ்ப் பயிற்சியை இரண்டாண்டுகளுக்குப் பெறுவதற்கு விரும்புவோரிடமிருந்து மனுக்கள் கீழ்க்காணும் மாதிரி விண்ணப்பப் பத்திரத்தில் 1969 ம் ஆண்டு யூலை மாதம் 1 ம் திகதிக்கு முன்பாகக் கோரப்படுகின்றன. இம்மனுப்பத்திரங்களை " அதிபர், கமத்தொழிற் பாடசாலை, குண்டசாலை " என்னும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

இருவருடச்சான்றிதழ்ப் பயிற்சி இரு பகுதிகளாகவுள்ளன.

**முதலாம் பகுதி.**—பொதுப்பயிற்சி எல்லா மாணவர்கட்கும் கட்டாயமானது. விவசாயம் சம்பந்தப்பட்ட பொது விஞ்ஞானமும் கணிதமும், கமத்தொழில் தத்துவங்களும் காலநிலையும், மிருகபரிபாலனத் தத்துவங்கள், நெல்வேளாண்மை, கமத்தொழில் பொருளாதாரம், பண்ணைப் பரிபாலனம் ஆதியன உட்பட.

**இரண்டாம் பகுதி.**—விரும்பிய பாடத்தில் விசேட பயிற்சி பெறுதல். விண்ணப்பதாரர் விருப்பத்தின் பேரில் கீழ்க்காணும் பாடங்களுள் ஒன்றைத் தெரிந்தெடுக்கலாம்.

(1) பயிர் வேளாண்மை.—பெருந்தோட்டப் பயிர்கள், நெல்லும் மேட்டு நிலப் பயிர்களும் உபகரணங்களும் சாகுபடி முறைகளும், கமபப்ரிசோதனைகள் ஆகியவை உட்பட ;

(2) மிருகபரிபாலனம்.—மாடு, எருமை, கோழி, பன்றி, ஆடு, ஆகிய விலங்கினங்களின் வளர்ப்பு முறைகள் போசனை,கட்டிடங்கள் உபகரணங்கள், சாகுபடி முறைகள் ஆகியவை உட்பட ;

(3) பூங்கனியியல்.—பூங்கனியியல் தத்துவங்கள், கனியியல், பழப்பாகனம், மரக்கறிச் செய்கை, வரத்தகப் பயிர்ச் செயகை, தேனீ வளர்ப்பு, பூந் தோட்டச் செய்கை, உபகரணங்கள் சாகுபடி முறைகள் ஆதியன உட்பட ;

(4) கமப்பொறியியல்.—பொறியியல் விஞ்ஞானம், கமப்பொறிகளும் வலுவும், பொறி உபயோகம், கட்டிட அமைப்பு, வயல் பொறியியல், வரைதல் பாகம் செய்தல், பொதுப் பயிர் வேளாண்மை ஆதியன உட்பட ;

(5) கிராமிய மனையியற் கலை.—வீட்டுத்தோட்டம், பூந்தோட்டம், கால்நடைவளர்த்தல், வீட்டுப் பணி, தையற்கலை, உடை தயாரித்தல், சுகாதாரம், சிசுபரிபாலனம், முதலுதவி, நோயாளர் பராபரிப்பு ஆதியன உட்பட.

இப்பயிற்சிக்கு ஆண்களும் பெண்களும் விண்ணப்பிக்கலாம். இரண்டாவது பகுதியில் கூறப்பட்டுள்ள ஐந்து (5) பாடங்களுள் ஒன்றைப் பெண்கள் தெரிந்தெடுக்கலாம். ஆனால் ஆண்கள் முதல் நான்கு பாடங்களுள் ஒன்றைத் தெரிந்தெடுத்தல் வேண்டும். தெரிந்தெடுத்த முக்கிய பகுதியை இரண்டாண்டு பயிற்சித் தொடக்கத்தில் குறிப்பிடவேண்டும்.

**விண்ணப்பதாரர் பின்வரும் தகுதியுடையோராய் இருத்தல் வேண்டும்**

**வயது.**—1969 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1 ம் திகதியில் 17 க்கும் 25 க்கும் இடைப்பட்ட வயதினராய் இருத்தல் வேண்டும்.

**கல்வித் தகைமைகள்.**—(1) பயிர் வேளாண்மை, மிருகபரிபாலனம், பூங்கனியியல், கமப்பொறியியல், ஆகியவற்றுள் ஒன்றை முக்கிய பாடமாக எடுக்க விரும்புவோர் :—

(அ) கமத்தொழிற் சாதனா பயிற்சிப் பாடசாலையில் ஓராண்டுப் பயிற்சியை முடித்து இறுதிப் பரீட்சையில் வெற்றிகரமாகச் சித்தியடைந்தவராகவும், சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்தவராக அல்லது சிங்களம் அல்லது தமிழ் மொழி, எண்கணிதம் அல்லது கணிதம் ஆகியவற்றுடன் மற்றும் நான்கு பாடங்கள் சேர்த்து பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டும். ;

(ஆ) கமத்தொழிற் சாதனா பயிற்சிப் பாடசாலையில் பயிற்சி பெறாத விண்ணப்பதாரர்கட்கு சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் (சாதாரண) பின்வரும் பாடங்களுடன் சேர்த்து ஆறு பாடங்களில் சித்தியெய்தி இருக்க வேண்டும்.

(1) சிங்களம் அல்லது தமிழ் மொழி,

(2) எண்கணிதம் அல்லது கணிதம்,

(3) விவசாயம், பொதுவிஞ்ஞானம், உயிரினவியல், தவாவியல் விலங்கியல, பௌதிகவியல், இரசாயனவியல், ஆகியவற்றுள் ஒன்று.

2. கிராமிய மனையியற் கலையை முக்கிய பகுதியாக எடுக்க விரும்புவோர்:—

(அ) கமத்தொழிற் சாதனா பயிற்சிப் பாடசாலையில் ஓராண்டுப் பயிற்சியை முடித்து வெற்றிகரமாக இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்தவராகவும் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்தவராக அல்லது சிங்களம் அல்லது தமிழ் மொழி, எண்கணிதம் அல்லது கணிதம் ஆகியவற்றுடன் மற்றும் நான்கு பாடங்கள் சேர்த்து பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டும் ;

(ஆ) கமத்தொழிற் சாதனா பயிற்சிப் பாடசாலையில் பயிற்சி பெறாத விண்ணப்பதாரர்கட்கு சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சையில் பின்வரும் பாடங்கள் சேர்த்து ஆறு (6) பாடங்களில் சித்தியெய்தி இருக்கவேண்டும்.

(1) சிங்களம் அல்லது தமிழ் மொழி ,

(2) எண்கணிதம் அல்லது கணிதம்,

(3) விவசாயம், பொது விஞ்ஞானம், உயிரினவியல், தாவரவியல், விலங்கியல், பௌதிகவியல், இரசாயனவியல், மனையியல், சுகாதாரமும் சரீரசாஸ்திரமும், தையற்கலை ஆகியவற்றுள் ஒன்று.

கமத்தொழிற் பாடசாலையில் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் போதனைகள் அளிக்கப்படும். மனுதார்கள் இம்மொழிகளில் பாடபோதனைகளைப் பெற்று சிங்களம் அல்லது தமிழ் மொழிகளில் பரீட்சைக்குத் தோற்றக் கூடிய தகுதி உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

இப் பாடசாலை குண்டசாலையில் அமைந்துள்ளது. பயிற்சிக் காலத்தில் மாணவர்கள் பாடசாலை விடுதியில் கட்டாயமாக வதிதல் வேண்டும். ஓராண்டுக்குரிய கட்டணம் உணவுக்கும் தங்குமிடத்திற்குமாகச் சேர்த்து சுமார் ரூபா 550 ஆகும்.

கமத்தொழிற் பாடசாலையில் கொடுக்கும் இச்சான்றிதழ்ப் பயிற்சி ஒரு தொழில் முறைப்பயிற்சியாகும். எனவே இப்பயிற்சி முடிந்தபின் கமத்தொழிலை அப்பியாசம் செய்ய விரும்பும் மாணவர்களுக்கும் தனியார் துறைகளில் தகுந்த வேலையைப் பெறவிரும்பும் மாணவர்களுக்குமே உத்தேசிக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசாங்கம் இப்பயிற்சியில் சித்தியடைவோருக்கு உத்தியோகம் பெற இடமுண்டு என்றோ அல்லது உத்தியோகம் கொடுக்குமென்றோ உத்தரவாதம் கொடுக்கவில்லை என்பதை மனுச் செய்வோர் நன்கு கவனத்தில் கொள்ளவேண்டும்.

பி. ரி. ஜினேந்திரதாசா,
உதவிக் கமத்தொழில் அத்தியட்சகர்,
(கமத்தொழிற் கல்வியும் பண்ணையும்).

கமத்தொழில் இலாகா,
பேராதனை,,

### கமத்தொழில் பாடசாலை
### மனுப்பத்திரம்

1. குடும்பப் பெயர் : ————.
(தெளிவாக எழுதவும்)

2. இதர பெயர்கள் : ————.

3. முகவரி : ————.

4. ஆண்/பெண் : ————.

5. பிறந்த தேதி : ————.
1969 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1 ம் திகதியில் வயது
வருடம் : ———— மாதம் : ————. நாள் : ————.

6. தெரிவு செய்யும் விசேட பயிற்சிப் பாடம் (2 ம் பகுதியின் படி)

1. ..........................................

2. ..........................................

3. ..........................................

7. இறுதியாக எடுத்த பகிரங்கப்பரீட்சையின்பெயர் :————
எடுத்த தேதி :————

8. சிரேஷ்ட பாடசாலை அல்லது க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்கள் :

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. ............ | ...... | 6 ............ | ...... |
| 2. ............ | ...... | 7 ............ | ...... |
| 3. ............ | ...... | 8 ............ | ...... |
| 4. ............ | ...... | 9 ............ | ...... |
| 5. ............ | ...... | 10 ............ | ...... |

9. விரும்பும் போதனு மொழி :————.

10. சித்தியடைந்த ஆங்கிலத் தராதரம் : ————.

11. விண்ணப்பதாரர் கமத்தொழிற் சாதனு பயிற்சிப் பாடசாலையில் பயிற்சி பெற்றிருந்தால : ————.
(அ) கமத்தொழிற் சாதனு பயிற்சிப் பாடசாலையின் பெயர் : ————.
(ஆ) வருடம் : ————.
(இ) பெறுபேறு : ————.

12. விண்ணப்பதாரர் இளைஞர் விவசாயக் கழக அங்கத்தவராக இருந் தால் : ————.
(அ) கழகத்தின் பெயர் : ————.
(ஆ) மாவட்டம் : ————.

13. இறுதியாகப் படித்த பாடசாலையின் பெயர் : ————.
பாடசாலையிலிருந்து விலகிய திகதி : ————.

14. விண்ணப்பதாரர் விவசாயத்தில் அனுபவம் பெற்றிருந்தால் அவற் றின விபரங்கள் : ————.

15. தந்தை அல்லது பாதுகாவலரின் பெயரும் விலாசமும் : ————

16. தந்தை அல்லது பாதுகாவலரின் தொழில் : ————.

17. விண்ணப்பதாரர் பயிற்சியின் பின் கமத்தொழிலில் ஈடுபடுவதாக இருந்தால் அவற்றுக்காக இருக்கும் வழிவகைகள் : ————

18. விண்ணப்பதாரர் பயிற்சியின் பின் சம்பளம் பெறும் உத்தயோகத் தில் சேர விரும்பினுல் அதற்காக விண்ணப்பதாரருக்கு இருக்கும் வழி வகைகள் : ————.

19. விண்ணப்பதாரர் இவ்விவசாயப் பயிற்சியைப் பெறத் தகுதியுடைய வர் என்று உறுதிப்படுத்துபவர் இருவரின் பெயரும் விலாசமும் : ————.

(1) ..............................................

(2) ..............................................

**குறிப்பு**.—விண்ணப்பதாரர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டால் மேற் கூறிய உறுதிப்படுத்துபவர்களிடமிருந்து பெற்ற இரு நற்சாட்சிப் பத்திரங்களின் மூலப் பிரதிகளுடன் இறுதியா கப் படித்த பாடசாலை அதிபரிடமிருந்து பெற்ற நற்சாட்சிப் பத்திரத்தின் மூலப்பிரதியையும் சமர்ப்பிக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியளவில், மேலே நான் கொடுத்துள்ள பதில்கள் யாவும் சரியானவையென்றும் உண்மையான வையென்றும் இத்தால் உறுதிப்படுத்திப் பிரதிக்ஞை செய்கின்றேன்.

————.
மனுதாரின் கையொப்பம்.

திகதி : ————.

6–39—6.6.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,857.

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுவுக்கு மரவேலை தொழிற் சாலை இருக்குமிடத்தில் 4,200 கன அடிகள் இலங்கை தேக்கு மரம் வழங்குவதற்கும் ஒப்படைப்பதற்குமான கேள்விப் பத் திரங்களைக் கொழும்பிலுள்ள கொழும்பு கப்பற்றுறை ஆணைக் குழு கேள்விச் சபைத் தலைவர் 1969, ஜூன் மீ 27 ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிவரை ஏற்றுக் கொள் வார்.

1969, ஜூன் மீ 27 ம் திகதி பிற்பகல் 2.30 மணியளவில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்பொழுது கேள்வியாளர் கள் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

கேள்விப் பத்திரங்களைப் பதிவுத் தபாலில் அனுப்ப விரும் பாத கேள்வியாளர்கள் கேள்விச் சபைத் தலைவரால் கேள் விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்கென அதிகார மளிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தரிடம் கேள்விப் பத்திரங் களை நேர்முகமாகக் கொடுத்து அவைகளை அவர் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புக்கூற்றை எழுத்து மூலம் அவரிட மிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். அல்லது அவர் நேர் முகமாக வந்து தங்களின் கேள்விப் பத்திரங்களை இத்திணைக் கள கேள்விப் பத்திரப் பெட்டியில் சேர்ப்பித்தல் வேண்டும்.

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு அலுவலகத்தில் கேள்வி சம்பந்தமான சாதனங்களைப் பார்வையிடலாம். கேள்வி வைப்புப் பணமாக ரூபா 250/- கொழும்பிலுள்ள கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு சிறுப்பர் வழங்கிய பற் றுச்சீட்டுடன் கொழும்பு கப்பற்றுறை ஆணையாளருக்கு விண் ணப்பஞ் செய்வோருக்குக் கேள்விப் பத்திரப் படிவங்கள் வழங்கப்படும். கேள்வி வைப்புப் பணம் கேள்வி நிபந்தனைக ளுக்கேற்ப திருப்பிக் கொடுக்கப்படும்.

மேலே குறிப்பிட்ட பிரகாரம் பெற்றுக் கொள்ளப்படும் படிவங்களில் கேள்விப் பத்திரங்கள் இருத்தல் வேண்டும். கேள்வி சம்பந்தமான சாதனங்கள் 1969, ஜூன் மீ 25 ம் திகதி நண்பகல் 12.00 மணிவரை வழங்கப்படும்.

எல். எஸ். த சில்வா,
கப்பற்றுறை ஆணையாளர்க்காக.

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு,
கொழும்பு 1, 6.6.1969.

6-51—6.6.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,857

## காணி அபிவிருத்தித் திணைக்களம்

**அக்கராயன்குளம் வைத்தியசாலை மாவட்ட வைத்திய உத்தியோகத்தர் குடிமனைக்கு மின் இணைப்புச் செய்வதற்கான கேள்விப்பத்திரம்**

மேறகுறிப்பிட்ட சேவை சம்பந்தமாக 1969 ம் ஆண்டு ஜூன் மாதம் 20 ந் திகதி முற்பகல் 11 மணிவரை காணி அபிவிருத்தி அதிபரால் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப்பத்திரங்கள் பெறுவதற்கு ரூபா 25 கட்டுப்பணமாக இவ்வலுவலகத்திலோ அல்லது காணி அபிவிருத்தி அதிபரின் 1 ம் இலக்கக் கணக்கில் வரவு வைக்கும் பொருட்டு இலங்கை வங்கி (யோர்க் வீதி அலுவலகத்தில்) யிலோ அல்லது கொழும்பிற்கு வெளியிலுள்ள ஏதாவதொரு கச்சேரியிலோ செலுத்தி 1969 ம் ஆண்டு ஜூன் மாதம் 19 ந் திகதி நண்பகல் 12 மணிவரை அதற்குரிய பற்றுச்சீட்டைக் கொழும்பு 1, காணி அபிவிருத்தி அதிபருக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் அவரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களில் இணைப்படியில் கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

3. வைப்புப்பணம் செலுத்தியதற்குரிய பற்றுச்சீட்டைக் கேள்விப் பத்திரதாரர்கள் கவனமாக வைத்திருந்து, வைப்புப்பணத்தை மீளப்பெற விண்ணப்பிக்கும்போது சமர்ப்பிக்க வேண்டும். இவைகளைக் கேள்விப் பத்திரங்களுடன் இணைக்கக்கூடாது.

4. கேள்விப்பத்திரப் படிவங்கள் முதலியவற்றைப் பெற்றும் கேள்விப் பத்திரங்களைச் செலுத்தத் தவறுவோரின் வைப்புப்பணத்தை மீளப் பெறவேண்டுமாயின் கேள்விப்பத்திரங்களை அனுமதிப்பதற்காகக் குறிக்கப் பட்ட திகதியும் நேரமும் முடிவடையுமுன்னர் படிவங்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

5. எல்லாக் கேள்விப்பத்திரங்களிலும் " அக்கராயன்குளம் வைத்திய சாலை மாவட்ட வைத்திய உத்தியோகத்தர் குடிமனைக்கு மின் இணைப்புச் செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் " எனக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டுக் காணி அபிவிருத்தி அதிபர், எச்சலன் சதுக்கம், கொழும்பு 1 என்று முகவரியிட்டு அனுப்பப்பட வேண்டும். கேள்விக்காரரின் பெயரும் முகவரியும் கடித உறையின் இடது பக்கக் கீழ் மூலையில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் தபால் மூலமாயின் பதிவுத்தபாலிலும் அல்லது கேள்விக்காரர் நேரடியாகவும் அல்லது அவரின் முகவர் மூலம் நேரடியாகவும் பிரதான கணக்காளர், காணி அபிவிருத்தித் திணைக்களம் அல்லது ,காணி அபிவிருத்தித் திணைக்களக் கேள்விப்பத்திரப் பெட்டியிலோ சேர்ப்பிக்கலாம்.

6. கேள்விப்பத்திரங்கள் நிரந்தரமானவையும், மாற்ற முடியாதவையுமாகும். கேள்விப்பத்திரங்களை ஒப்புநோக்குவதற்காக அவைகளைக் கேள்விப்பத்திர முடிவு திகதியில் இருந்து 60 நாட்களுக்குள் மீளப் பெற்றுக் கொள்ளக்கூடாது.

7. கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொண்ட திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் கேள்விக்காரர் வேலையை முடிக்க வேண்டும்.

8. தேர்வு பெற்ற கேள்விக்காரர் பிணைப்பணம் செலுத்தவும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவும் கேட்கப்படுமிடத்துத் தவறின் அவரது கேள்விப்பத்திர வைப்புப்பணம் பறிமுதல் செய்யப்படுவதுடன் அவர் அரசாங்க வேலை ஒப்பந்தங்களைப் பெறமுடியாது தவறிய கேள்விக்காரர் பட்டியலில் சேர்க்கப்படுவர்.

9. கொழும்பு 1, எச்சலன் சதுக்கத்திலுள்ள காணி அபிவிருத்தித் திணைக்களத்தில் 1969 ம் ஆண்டு ஜூன் மாதம் 20 ந் திகதி முறபகல் 11 மணிக்குக் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் கேள்விக்காரர் சமூகமளிக்கலாம்.

10. கேள்விப் பத்திரங்களுக்குக் கேள்விக்காரர் விண்ணப்பிக்கும் போது இவ்வகையான வேலைகள் செய்வதற்குத் திறமையும், அனுபவமும் உண்டென்பதை நிரூபிக்க வேண்டும்.

11. தெரிவுசெய்யப்பட்ட கேள்விப்பத்திரகாரர் தேர்ச்சியுள்ள/தேர்ச்சியற்ற இலங்கையரையே வேலை ஒப்பந்தத்தின் கீழ் வேலைக்கமர்த்த வேண்டும். கூடியவரை வேலை நடைபெறும் பிரதேசங்களிலிருந்தே கூலியாட்களை வேலைக்கமர்த்தல் வேண்டும்.

12. கேள்விப்பத்திரத்தில் சிலவற்றையேனும் அல்லது யாவற்றையேனும் நிராகரிக்க அல்லது சிலவற்றையேனும் ஏற்க அரசாங்கத்திற்கு ஆட்சேபனையற்ற உரிமையுண்டு.

13. வேறு ஏதாவது தகவல்கள் வேண்டுமாயின் காணி அபிவிருத்தி திணைக்கள மேற்பார்வைப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பொ. இரத்தினசிங்கம்,
காணி அபிவிருத்தி அதிபருக்காக.

சீரீ/2/361.
காணி அபிவிருத்தித் திணைக்களம்,
எச்சலன் சதுக்கம்,
கொழும்பு 1,
1969 ம் ௵ மே ௴ 28 ந் உ.

6—164—6.6.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,857

---

## நாடு, நகர நிருமாணப் பகுதி

### உள்ளூராட்சி அமைச்சு

### கதிர்காமப் புனிதநகர அபிவிருத்தித் திட்டம்—நீர்த்தொட்டி மலகூடம் அமைத்தல்

கதிர்காமப் புனித நகர அபிவிருத்தித் திட்டத்தில் ஆறு நிரை நீர்த் தொட்டி மலகூடம் அமைப்பதற்கான இலச்சனையிட்ட கேள்வி இணைப் படிகளை 1969, யூன் மாதம் 24 ஆம் திகதி மு. ப. 10. மணிவரை கொழும்பு 10, டி. ஆர். விஜயவர்தன மாவத்தையில் உள்ள நாடு, நகர நிருமாணப் பிரிவின் கேள்விச் சபைத் தலைவர் ஏற்றுக்கொள்வார். அதே நாளில் நாடு, நகர நிருமாணப் பிரிவில் மு. ப. 10.15 மணிக்குக் கேள்விகள் திறக்கப்படும்பொழுது கேள்விக்காரரும் சமூகம் அளிக்கலாம்.

2. கேள்விகள் நாடு, நகர நிருமாணப் பணிப்பாளர், டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரிக்கு விண்ணப்பித்துப் பெற்ற கேள்விப்பத்திரப் படிவத்தில் இருத்தல் வேண்டும். கேள்விப்பத்திரப் படிவங்கள் 1969, யூன் மாதம் 23 ஆம் திகதி பி. ப. 2.30 மணிவரை வழங்கப்படும். இவை சிவில் பொறியியல் வேலைகளுக்காக 150,000 ரூபாவிற்கும் அதற்கு மேலும் ஏதாவது அரசாங்கத் திணைக்களத்திற் பதிவுசெய்த தகுந்த ஆதாரத்தையும் கேள்வி வைப்பாக 100 ரூபாவையும் கொழும்பு 1, ஹேமாஸ் கட்டிடத்தில் உள்ள உள்ளூராட்சி அமைச்சிலாயினும் அல்லது கொழும்பிற்கு வெளியேயுள்ள எந்தக் கச்சேரியிலாயினும் கட்டிய பற்றுச்சீட்டை உடையவர்களுக்கு வழங்கப்படும்.

3. அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களும் கேள்விகள் அனுப்பலாம். அவை மேலே பந்தி 2 இல் குறிப்பிட்டதற்கான தொகையை ஏதாவது அரசாங்கத் திணைக்களத்தில் பதிவு செய்திருத்தல் வேண்டும். அப்படியான சங்கங்கள், கேள்வி வைப்பிலிருந்து விதிவிலக்கப்படும்.

4. எல்லாக் கேள்விகளும் இலச்சனையிடப்பட்டு உறையின் இடப் பக்க மேல் மூலையில் "கதிர்காம நீர்த்தொட்டி மலகூடம் அமைத்தல்" எனக் குறிப்பிட்டுப் பதிவுத் தபாலிலோ இந்நோக்கத்திற்காக நாடு, நகர நிருமாணப் பிரிவில் வைத்திருக்கும் கேள்விப்பெட்டியில் இடப்பட்டோ அல்லது நாடு, நகர நிருமாணப் பிரிவு அலுவலக உதவியாளரிடம் கையளித்ததற்கான ஒப்புக்கொள்ளுதலையோ பெற வேண்டும்.

என். குணரத்ன,
நாடு, நகர நிருமாணப் பணிப்பாளர்.

நாடு, நகர நிருமாணப் பிரிவு,
உள்ளூராட்சி அமைச்சு,
டி. ஆர். விஜயவர்தன மாவத்தை,
கொழும்பு—10. 1969, மே 27.

6—162—6.6.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,857

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### மகாகனத்தருவ உபபிரிவு

மகாகனத்தருவ உபபிரிவில் மகாகனத்தருவ காம்பின் குளாய் நீர் விநியோக வேலைத்திட்டத்திற்கான கேள்விப்பத்திரங்கள் அனுராதபுரத்திலுள்ள பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளரினால் 1969 ம் ஆண்டு யூன் மாதம் 24 ம் திகதி காலை 10 மணி வரைக்கும் ஏற்றுக் கொள்ளப்படும். அதன்பின் உடனே திறக்கப்படும்.

2. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் 45,000 ரூபாவுக்கும் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள், கூட்டுறவு மொத்த ஸ்தாபனங்கள், கிராமமுன்னேற்றச் சங்கங்கள் மட்டுமே இக்கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

3. இக்கேள்விகளுக்கான வெற்றுப்பத்திரங்களை மகாகனத்தருவ, அனுராதபுரம், பதவியா, ராசாங்கன ஆகிய உபபிரிவு நீர்ப்பாசனக் காரியாலயங்களில் 20.6.69 நண்பகல் 12 வரை கேள்விக்கட்டணமாக ரூபா 50 செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இக்கேள்விக் கட்டணத்தை ஓர் கச்சேரியிற் செலுத்திப்பற்றுச் சீட்டுக்காட்டினாலும் போதுமானது. கேள்வியாளராக முன்வருவோர் தங்கள் பதிவுப் புஸ்தகங்களுடன் தாம் இப்போது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தி இக்கேள்விகளுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

4. குளாய் நீர் விநியோக வேலையில் தேற்சியும் அதற்கான ஆயுதங்களும் உண்டென்று அதாட்சிப் படுத்தும் ஒப்பந்தக்காரர்களுக்கு மட்டுமே கேள்விப்பத்திரங்கள் விநியோகிக்கப்படும்.

இக்கேள்விக்கான மேலதிக விபரங்கள் எல்லாவற்றையும் மகாகனத்தருவ உபபிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களின் பெற்றுக்கொள்ளலாம்.

டீ. ஈ. சோமசுந்தரம்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
மகாகனத்தராவ உபபிரிவு.

மிகிந்தலை,
1969 ம் ௵ மே ௴ 24 ந் உ.

6—19—6.6.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,857.

## கமத்தொழிற் சேவை இலாகா

### மொனருகலை மாவட்டத்தில் பிபிலே தானியக் களஞ்சியம் கட்டுவதற்கான கேள்விகள்

மொனருகலை மாவட்டத்தில் பிபிலே தானியக் களஞ்சியம் கட்டுவதற்கான கேள்விகள் 42, சேர் மாக்கஸ் பேனுந்து வீதி, கொழும்பு 7 இல் உள்ள கமத்தொழிற் சேவை இலாகாவின் கேள்விச்சபைத் தலைவரால் 1969 ம் ஆண்டு ஜூன் மாதம் 27 ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

2. கேள்விகள் கட்டுப்பணமாக ரூபா 250/- (இருநூற்றி ஐம்பது) ஐ 60, கோட்டன் இடம், கொழும்பு 7 இல் உள்ள கணக்காளரிடம் கட்டவேண்டும். அல்லது கொழும்பிற்கு வெளியேயுள்ள வேறு எந்தக் கச்சேரியிலோ கட்டி பற்றுச் சீட்டைச் சமர்ப்பித்து, 42, சேர் மாக்கஸ் பேனுந்து வீதி, கொழும்பு 7 இல் உள்ள கமத்தொழிற் சேவை ஆணையாளரிடமிருந்து பெறப்படும் கேள்விப்பத்திரப் படிவங்களில் மாத்திரமே கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். அவை இரு பிரதிகளில் இருக்கவேண்டும்.

3. ரூபா 30,000/- அல்லது அதற்கு மேற்பட்ட தொகையில் அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கட்டட ஒப்பந்தக்காரர் மாத்திரமே கேள்விப் பத்திரம் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர். அவர்கள் தங்கள் "பதிவுப் புத்தகத்தைக் காட்டி" படிவங்களை, 1969 ஜூன் மாதம் 26 ம் திகதி நண்பகல் 12 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். தபால் மூலமாக விண்ணப்பம் செய்வோர் தமது விண்ணப்பம் எனக்கு குறித்தகால எல்லைக்குள் கிடைக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்.

4. 42, சேர் மாக்கஸ் பேனுந்து வீதி, கொழும்பு 7 இல் உள்ள கமத்தொழிற் சேவை ஆணையாளரிடமிருந்து மேலதிக விபரங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

வி. தி. நவரத்ன,
கமத்தொழிற் சேவை ஆணையாளருக்காக.

கமத்தொழிற் சேவை இலாகா,
42, சேர் மாக்கஸ் பேனுந்து வீதி,
கொழும்பு 7,
1969 ம் ஆண்டு ஜூன் மாதம் 6 ம் திகதி.

6-49—6.6.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,857

---

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

### மின்சாரப் பொறியியல் வேலைகள்

இலங்கைப் போக்குவரத்துச் சபைக் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர், 1969 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி புதன்கிழமை மு. ப. 10.00 மணி வரை பின்வரும் வேலைகளுக்காகப் பொறியிட்ட கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளுவார்.

(1) அதி உயரதிர் வானொலிச் செய்தி அறிவிப்புச் சாதனங்களை வழங்குதலும் அமைத்தலும்.

பிரதம சிவில் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய பத்திரங்களில் கேள்விகள் இரட்டைப் பிரதிகளில் செய்யப்படவேண்டும். இவரிடமிருந்து எல்லா விவரங்களையும் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரகாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குத் திருப்தி அளிக்கக்கூடிய வகையில், அதி உயரதிர் வானொலிச் செய்தி அறிவிப்பு நிலையக்கோவைகள் அமைத்தவர்களாக அல்லது அமைக்கக்கூடிய தகுதியுடையவர்களாகவிருக்கிறார்களென சான்று காட்டக்கூடியவர்களாயுள்ள அல்லது எல்லாச் சாதனங்களையும் வழங்கத்துலக்கவும், பழுதுபார்க்கவும், பேணவும் தகைமை பெற்ற பணியாளர்களும் கருவிகளும் தம்மிடமுண்டெனச் சான்று காட்டக்கூடியவர்களாயுள்ள உள்ளூர் முகவர்கள் மாத்திரமே கேள்வியிடத் தகவுடையவராவர். கேள்வியிடுபவர்கள் தங்களுடைய சான்றோலைகளை, முதல் மின்சாரப் பொறியியலாளரிடம் பரிசோதனைக்குக் காட்டவேண்டும். அவ்வித சான்றோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னரே, கேள்விப்பத்திரக் கட்டுப்பணங்களையும் கேள்விப்பத்திரக் கட்டணங்களையும் காசாக பிரதம கணக்காளர் உத்தியோகத்தரிடம் கட்டவேண்டும். மீளளிக்கப்படக்கூடிய கேள்விப்பத்திரக் கட்டுப் பணமாக ரூபா 500/- ஐயும் சாதனத்தொகுதி ஒவ்வொன்றுக்கும் மீளளிக்கப்படமாட்டாத கேள்விப்பத்திரக் கட்டணமாக ரூபா 25/- ஐயும் கட்டிப் பெறப்பட்ட பற்றுச்சீட்டுக்களை 1969 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக பிரதம சிவில பொறியியலாளருக்குக் காட்டுவதன் பேரில் கேள்விப்பத்திரச் சாதனங்கள் வழங்கப்படும். தெரிவுசெய்யப்படும் கேள்விப்பத்திரகாரர் தெரிவுசெய்யப்பட்ட திகதியிலிருந்து ஒன்பது (9) மாத காலத்துக்குள் வேலையைத் தொடக்கவேண்டியதுடன், வேலை தொடக்கப்பட்ட திகதியிலிருந்து ஆறு (6) மாத காலத்திற்குள் பூர்த்தியாக்கவும் வேண்டும்.

பிரதம சிவில் பொறியியலாளர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

200, கிருல வீதி,
கொழும்பு 5.

6-205—6.6.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,857

---

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

கொழும்பு 5, கிருல வீதி 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர், 1969 ஆம் ஆண்டு யூன் மாதம் 25 ஆம் தேதி புதன்கிழமை மு. ப. 10.00 மணிவரை பின்வரும் வேலைகளுக்காகப் பிரத்தியேக பொறியிட்ட கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளுவார்.

(1) நாவலப்பிட்டி டிப்போ அத்தியட்சகரின் அலுவலகம் முதலியன அமைத்தல்

(2) மாத்தளை "கியூ" ஒதுக்கிடங்களை அமைத்தல்

பிரதம சிவில் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய பத்திரங்களில், கேள்விகள் இரட்டைப் பிரதிகளில் செய்யப்படவேண்டும். இவரிடமிருந்து எல்லா விவரங்களையும் பெற்றுக்கொள்வதுடன், இவரின் அலுவலகத்தில் படவரைவுகளையும் பரிசீலனை செய்யலாம். 1 ஆம் இலக்க வேலைக்கு ரூபா 1,00,000/- தொகைக்கும் 2 ஆம் இலக்க வேலைக்கு ரூபா 55,000/- தொகைக்கும் குறையாத சிவில் பொறியியல் வேலைகளுக்காக இ.போ.ச. வில் அல்லது அரசாங்க திணைக்களங்களில் பதிவு செய்யப்பட்ட கொந்தராத்துக்காரர்கள், தேவையான கேள்விப்பத்திரச் சாதனங்கள் வழங்கப்படுவதற்காக, கேள்விகள் ஒவ்வொன்றுக்கும் ரூபா 100/- க்கான கேள்விப்பத்திரக் கட்டுப்பணப் பற்றுச்சீட்டை பிரதம சிவில் பொறியியலாளருக்கு 1969 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆம் தேதி சனிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அல்லது முன்னதாக காட்டுவதன் பேரில் கேள்வியிடத்தகவுடையவர்களாயிருப்பார்கள். கேள்வியிடுபவர்கள் தங்களுடைய சான்றோலைகளைப் பரிசோதனைக்குக் காட்டவேண்டும். அவ்வித சான்றோலைகள் பிரதம சிவில் பொறியியலாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்டபின், கேள்விப்பத்திரக்கட்டுப்பணத்தை **காசாக மாத்திரம்** பிரதம கணக்காளர் உத்தியோகத்தரிடம் கட்டலாம்.

பிரதம சிவில் பொறியியலாளர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

200, கிருல வீதி,
கொழும்பு 5.

6-151—6.6.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,857

## தேசிய அபிவிருத்திப் பொருட்காட்சி—மட்டக்களப்பு

**1969, ஆவணி 9 ம் திகதி தொடக்கம் 12 ந் திகதிமுடிய**

கீழ்க்காணும் சேவைகளுக்கு சீல் வைத்த கேள்விப்பத்திரங்கள், 1969 ம் ஆண்டு ஆனி மாதம் 21 ந் திகதி நண்பகல் 12.00 மணிக்குமுன், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) தேவையான தளபாடங்களை சேகரித்து 45,000 ச.அடி விஸ்தீரண மான தற்காலிக காட்சியறைகளை நிறுவுதல். காட்சி அறைகள் தெளிவுள்ள அல்மேனியம் தகரத்தால் சாய்வாக வேயப்பட்டு, வளையாத அறுவை மரத்தாலும், கல்வனைஸ் இரும்புக்குழாயா லும், அல்லது டெக்சிக்கன் இரும்பாலும் நிறுவப்பட்டிருத்தல் வேண்டும்.

(ii) தேவையான தளபாடங்களைச் சேகரித்து காட்சியறைகளுக்கு பின்புறத்தில், 2,600 நீளஅடி நீளமுள்ளதும் 6½ அடி உயரமுமாக அல்மேனியம் தகடுகளால் எல்லைவகுப்பது.

(iii) தேவையான தளபாடங்களைச் சேகரித்து 3,200 நீள அடி உட்பரி மாணம் 7 அடி உயரமுமாக, அல்மேனியம் தகடுகளால், உட்பிரிவு எல்லையமைத்தல்.

(iv) ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரர்கள், பொருட்காட்சியினிறுதி யில் அவர்கள் சேகரித்து உபயோகித்த தளபாடங்களை, அவ்விடத் தினின்று, திரும்பவும் பெற்றுக்கொள்வதற்கு உரித்தாளியாவர்

கேள்விப்பத்திரங்களில் பொருட்காட்சிமுடிந்தபின் ஏற்படும் ஏற்றுமதிச் செலவு, பிரித்தல் செலவுகள் அடங்கியதாகவிருத்தல் வேண்டும். மேலே குறிப்பிட்ட (ii) (iii) கேள்விகளுக்கும், அலுமேனியம் தகடு அல்லாத் பிறிதொரு தளபாடம் உபயோகித்தலுக்கான, கேள்விப்பத்திரமொன் றும் சமர்ப்பிக்கவேண்டும்.

தே. நேசையா,
தேசிய அபிவிருத்திப் பொருட்காட்சித் தலைவரும்
அரசாங்க அதிபரும், மட்டக்களப்பு மாவட்டம்.

கச்சேரி,
மட்டக்களப்பு.
1969 ம் ஆண்டு மே மீ 25 ந் உ.

6-1—6.6.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,857

---

"ஏ"

## காணிப் பகுதி ஆணையாளர்

**மாத்தறை மாவட்டத்துக்குள் பற்றகேன புசகேன தண்ணீர் விநியோகத்திட்டம்**

மேற்படி வேலை சம்பந்தமாக ரூபா 20,000 க்கு அல்லது அதற்குக் கூடுதலான தொகைக்குப் பதிவு செய்யப்பட்ட பகிரங்க வேலைப் பகுதி அல்லது நீர்ப்பாசனப் பகுதி அல்லது கல்விப் பகுதி வேலைகள் நிமித்தம் (அ) அரசாங்கக் கொந்துருத்துக்காரர் (ஆ) கூலியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள்மூலம் கேள்விப் பத்திரங்கள் மேற்படி வேலைகள் சம்பந்தமாக ஏற்றுக் கொள்ளப்படும்.

2. இரண்டு பிரதிகள் ஒரே உறையில் சீல் வைக்கப்பட்டுத் தெளிவாக நிரப்பப்பட்ட கேள்விப்பத்திரங்கள் "தலைவர், காணியாளர் இலாகா கேள்விப் பத்திரச் சபை, த. பெ. இலக்கம் 500, கொழும்பு" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் கொழும்பிலுள்ள காலி மைதானத்திலுள்ள செயலாளர் அலுவலகத்திலுள்ள 357 ம் இலக்க அறையில் இதற்கென வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் இடப்பட வேண்டும், அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் அடங்கிய தபால் உறையில் இடது பக்க மேல் மூலையில் பற்றகேன–புசகேன தண்ணீர் விநியோகத் திட்டம் சம்பந்தமான கேள்விப்பத்திரம் என்று குறிப்பிடல் வேண்டும். 1969.7.18 ஆந் திகதி பி. ப. 2.30 மணிக்குமுன் கேள்விப்பத்திரச் சபைத் தலைவருக்குக் கிடைக்கும்படி அனுப்பப்படல் வேண்டும். அதே நேரத்தில் கேள்வியாளர்கள் பிரசன்னமாய் இருக்கலாம்.

5. 1969.7.10 ந் திகதிநண் பகல் 12 மணிவரை மாத்தறைக் கச்சேரியி லிருந்து கேள்விப் பத்திரங்கள் பெற்றுக் கொள்ளலாம். நியமிக்கப்பட்ட பத்திரங்களில் விண்ணப்பிக்காவிட்டால் ஆலோசனைக்கு ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

6. கேள்விக்காரர்கள் பிழை திருத்தங்கள் செய்திருந்தால், அழித் திருந்தால் ஒவ்வொரு திருத்தங்களும் கேள்விப்பத்திரக்காரரால் ஒப்பம் இடப்பட்டிருத்தல் வேண்டும்.

7. கேள்விப் பத்திரங்கள் விநியோகிப்பதற்கு முன் ரூபா 50 வைப்புப் பணமாக மாத்தறை மாவட்ட அரசாங்க அதிபர்பேரில் கட்டப்பட்ட பற்றுச்சீட்டுச் சமர்ப்பிக்கும்போது தேவையான கேள்விப் பத்திரங்கள் பெற்றுக் கொள்ளலாம். முதல் பந்தியில் குறிப்பிட்டுள்ள சங்கங்கள் இவ்வைப்புப்பணம் கட்டவேண்டிய அவசியமில்லை.

8. ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்விக்குரியவர்கள் இதுபற்றியவர் களுக்கு அறிவித்தல் கடிதத்திலுள்ள தினத்திலிருந்து 10 நாட்களுக் குள், இதற்குரிய பிணைத் தொகையைக் கட்டி ஒப்பந்தத்தைச் செய்ய மறுத்தால், அன்னாரின் கேள்விப் பத்திர வைப்புப்பணம் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது.

9. கேள்விப் பத்திரங்களை ஒப்புக்கொண்டபடிக்குக் கேள்விக்காரர் களால் கொடுக்கப்பட்ட விலாசத்துக்கு அனுப்பினால், கேள்விக்காரர் களுக்குக் கிடைத்திருக்குமென்று நம்பப்படும். ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டதின் பிறகு மற்றும் வைப்புப் பணங்கள் திருப்பிக் கொடுக்கப்படும்.

10. ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்வியாளர்கள் முழுத் தொகையில் 5 சத வீதத்தைப் பிணைத் தொகையை கட்டி வேலை திருப்திகரயாக குறிப்பிட்ட காலத்தில் முடித்துக் கொடுப்பதற்கென மாத்தறை அரசாங்க அதிபருடன் ஒப்பந்தம் செய்து கொள்ளல் வேண்டும். முதல் பந்தியில் குறிப்பிட்டுள்ள சங்கங்கள் இவ்வைப்புப் பணம் கட்டவேண்டிய அவசியமில்லை.

11. எதேனும் ஒரு கேள்வியை (ரெண்டர்) அல்லது அதன் பகுதியை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ அரசாங்கத்துக்குப் பூரண அதிகார முண்டு.

12. கேள்விப்பத்திரச் சபையின் அனுமதியில்லாமல் ஏற்கப்பட்ட கேள்விக்காரர் வேறு யாராகினும் ஒருவருக்கு வேலையை ஒப்படைத்தல் அல்லது ஒரு பாகத்தைக் கூலிக்குச் செய்வித்தல் கூடாது. அப்படிக் கேள்விக்காரர்கள் யாராகிலும் வேறொருவருக்கு அட்ரேணி அதிகாரத் தைக் கொடுத்தலை அதை நிராகரிக்க அரசாங்கத்துக்கு அதிகாரமுண்டு.

13. கொந்துருத்துக்காரின் கீழ் வேலை செய்வோர் ஒருவனைக் குறித்து ஏதும் தகராறுகள் இருப்பின், மாத்தறை அரசாங்க அதிபருக்குக் கடிதமூலம் அன்னாரின் சேவையை நிறுத்தும்படி கொந்துருத்துக் காரருக்கு அறிவிக்க அதிகாரமுண்டு.

14. கொந்துருத்துக்காரர்கள் இலங்கை அரசாங்க சார்பில் திணைக் கள அதிபர் உடன் கைச்சாத்திடப்படலாம். இலங்கை அரசாங்க சார்பில் கொந்துருத்துக்காரருடன் கையொப்பமிடுவோரின் தராதரம் கொடுக்கப் படல் வேண்டும்.

15. கேள்விப் பத்திரம் சமர்ப்பிப்போர் இதற்கு முன் பாரம் எடுககப்பட்ட கொந்துருத்து வேலையில் ஈடுபட்டிருக்கும் வேலை சம்பந்தமாக மேற்பார்வையாளர் அதிகாரிகளிடமிருந்து அத்தாட்சிப் பத்திரம், வைப் புப் பணம் பற்றுச்சீட்டுடன் போதிய காலத்துக்குள் மாத்தறை மாவட்ட அரசாங்க அதிபருக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

16. யாராகிலும் ஒரு கேள்விப் பத்திரத்தை ஏற்றுக்கொள்ளும் தறுவாயில் பிணை தேவைப்பட்டால், தெரிவு செய்யப்பட்ட கேள்வியாளர் அவசியமான காரணங்களைப் பூர்த்தி செய்யத் தயாராயிருத்தல் வேண்டும்.

17. வேறு அரசாங்க திணைக்களத்தில் கொந்துருத்து வேலையில் ஈடுபட்டிருக்கும் கேள்வியாளர் வேறு வேலை செய்யும் திணைக்களத்தின் பெயரையும் அதன் மாவட்டத்தையும் தரல் வேண்டும்.

18. அரசாங்க வேலை திருப்திகரமாகச் செய்யப்படாத ஒப்பந்தக்காரரின் பட்டியலில் கொந்துருத்து கேள்வியாளரின்பெயர் இருந்தால், அன்னாரின் கேள்விப் பத்திரம் நிராகரிக்கப்படும்.

பி. டபிள்யு. சி. டி சில்வா,
அரசாங்க அதிபருக்காக,
மாத்தறை மாவட்டம்.

மாத்தறைக் கச்சேரி,
1969 ம் ஆண்டு மே மீ 27 ந் உ.

6–190—6.6.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,857

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

## அரசினர் மின்சார இலாகா

கொம்பனித்தெருவைச் சேர்ந்த சேர் முஹம்மத் மாக்கான் மாக்கார் மாவத்தையில் 66 ம் இலக்கத்தில் அமைந்திருக்கும் அரசினர் மின்சார உபநிலைய காரியாலயத்தில் 1969 ம் ஆண்டு ஜூன் மாதம் 18 ம் திகதி காலை 10.30 மணி முதல் தேவையற்ற உபகரணங்களும் மின்சாரப் பொருட்களும் பகிரங்க ஏலத்தில் விடப்படும். மேற்படி பொருட்களை அன்று 8 மணி முதல் பார்வையிடலாம். ஏலத்தில் பெறும் பொருட்கள் உடனடியாகப் பணம் கட்டப்பட்டு அன்று மாலை 4.00 மணிக்கு முதல் அகற்றப்படவேண்டும்.

டபிள்யு டி. ஆப்ரூ,
பகுதி அதிகாரி-கொழும்புப் பிரிவு.

அரசினர் மின்சாரத் துறை,
த. பெ. இல. 1076,
கொழும்பு 2.

6-57—6.6.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,857

# ஆயவிற்பனையும் குத்தகை விற்பனையும்

## மன்னார் மாவட்ட கள்ளுத் தவறணைக் குத்தகை

**மறு விற்பனை, 1.7.69 தொடக்கம் 30.6.70 வரை**

இதில் காட்டப்பட்டிருக்கும் அட்டவணையில் சொல்லப்பட்ட மன்னார் மாவட்டக் கள்ளுத் தவறணைகளில் 1.7.69 தொடக்கம் 30.6.70 வரைக்குமான காலவெல்லைவரை சில்லறையாக விற்பனை செய்வதன்பொருட்டு சிறப்புரிமை வழங்குவதற்காக நடைமுறையில் இருந்துவரும் பொது விதிகளுக்கமையவும் 21.3.69 ந் தேதி பிரசுரிக்கப்பட்ட 14,746 இலக்க அரசாங்க வர்த்தமானியில் காணப்படும் கள்ளுத் தவறணைக் குத்தகை விதிகளுக்கமையவும் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

2. கேள்விப்பத்திரங்கள் " மன்னார் மாவட்டக் கள்ளுக் குத்தகை 1969/70 " என்று குறிப்பிடப்பட்டு, அட்டவணையில் காட்டப்பட்ட நேரத்திற்குப் பிந்தாமல் 11.6.69 ந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ வந்து சேரக்கூடியதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

3. ஒவ்வொரு தவறணைக்கும் தனித் தனிக் கேள்விப்பத்திரங்கள் அனுப்பப்படல்வேண்டும். எவரும், எந்தவொரு தவறணைக்காவது மூன்றுக்கு மேற்பட கேள்விப்பத்திரங்களை அனுப்புவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். ஐந்துபேருக்கு அதிகமானவர்கள் கூட்டாகச் சேர்ந்து எந்தவொரு தவறணைக்கும் கேள்விப்பத்திரம் அனுப்ப முடியாது.

4. கேள்விக்காரர் —

(அ) நேர்முகத்தில் சமுகம் தராவிட்டால் ;

(ஆ) எந்தப் பகுதிக்கு அவருடைய காணி இருக்கிறதோ அந்தப் பகுதி காரியாதிகாரியிடம் பெறுமதிக்குரிய அத்தாட்சிப்பத்திரத்துடன் கேள்விப்பத்திரம் அணைக்காவிட்டால் ;

(இ) பெறுமதிக்குரிய அத்தாட்சிப்பத்திரத்தில் சொல்லப்பட்ட காணியின் பெறுமதி கேள்விப்பத்திரத்தில் குறிக்கப்பட்ட தொகையின் 25 வீதத்துக்குக் குறைந்தால்

அவரது கேள்விப்பத்திரம் கவனத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(ஒன்றுக்கு மேற்பட்ட தவறணைக்கு கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கும் கேள்விக்காரர், அதேவேளையில் அதே ஆண்டுக்குரிய வேறு தவறணைக்கு கேள்விப்பத்திரத்துடன் பெறுமதி அத்தாட்சிப்பத்திரத்தின் மூலப்பிரதியை அணைத்திருந்தால், அப்பத்திரத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி ஒன்றை இணைக்கலாம். அத்தகைய ஒவ்வொன்றிலும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பெறுமதிப் பத்திரப் பிரதி, மூலப்பிரதி இணைக்கப்பட்ட தவறணையின் பெயரையும் இலக்கத்தையும் கொண்ட குறிப்பை உள்ளடக்கியிருக்க வேண்டும்.)

5. கேள்விப்பத்திரங்களைப் பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கலாம். அல்லது மன்னார் கச்சேரியிலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியினும் போடலாம். ஆனால் கேள்விப்பத்திரம் எந்தக் தவறணைக்குத் தாக்கல் செய்யப்படுகின்றதோ அந்தத் தவறணையின் பெயரும் இலக்கமும் தபாலுறையின் இடதுபக்க மேல்மூலையில் பொறிக்கப்பட்டு, தபாலுறை சீல் பண்ணப்பட்டிருத்தல் வேண்டும். ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் தனித்தனி தபாலுறயில் வைத்து, மேற்காட்டிய குறிப்புக்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

6. கீழே சொல்லப்பட்ட ஒவ்வொரு தவறணைக்கும் எதிராகவுள்ள வைப்புப் பணத்தைக் கேள்விக்காரர் செலுத்துதல் வேண்டும் :—

(அ) மன்னார் கச்சேரியிலோ அல்லது வேறு எந்தக் கச்சேரியிலாவது வைப்புப் பணத்தைச் செலுத்தலாம். வைப்புப் பணத்திற்குரிய பறறுச்சீட்டு கேள்விப்பத்திரத்துடன் இணைக்கப்படவேண்டும் ;

(ஆ) தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர், விற்பனை நிபந்தனைகளில் உடனடியாகக் கைச்சாத்திடத் தவறினால், அவரது வைப்புப் பணம் பறிமுதல் செய்யப்படும் ;

(இ) தெரிவு செய்யப்படாத கேள்விக்காரர்களின் வைப்புப்பணம், தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டபின்னர் திருப்பிக்கொடுக்கப்படும்.

7. எந்தவொரு கேள்விப்பத்திரத்தையும் எற்கவோ நிராகரிக்கவோ மன்னார் அரசாங்க அதிபருக்கு மாத்திரம் உரிமையுண்டு.

8. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர், விற்பனை நிபந்தனையிலும் ஒப்பந்தத்திலும் கைச்சாத்திடவும், அரசாங்க அதிபரால் குறிப்பிடப்படும் பிணைப் பணத்தைச் செலுத்தவும் தேவையான முத்திரைகளைக்கொடுப்பதற்கும் தயாராயிருத்தல் வேண்டும்.

9. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர், குத்தகைக்காரர் என அறிவிக்கப்பட்ட மாத்திரத்தில் தான் எந்த இடத்தைத் தவறணைக்காகத் தெரிவு செய்கிறாரென்பதை மன்னார் அரசாங்க அதிபருக்கு அறிவித்து, அவரிடமிருந்து அதற்கான அனுமதியையும் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

10. மேற்கொண்டு விபரங்கள் அறியவேண்டுமாயின் மன்னார் கச்சேரிக்கு மனுப்பண்ணிப் பெற்றுக்கொள்ளவும்.

**மேற்கூறப்பட்ட அட்டவணை**

(மன்னார் மாவட்ட கள்ளுத் தவறணைகள் 1.7.69—30.6.70 மறுவிற்பனை)

| தொடர் பிரிவு இல. | | தவறணைக்காகத் தெரிவு செய்யப்படும் உள்ளூர்ப் பகுதி | வைப்புப் பணத் தொகை | கேள்விப் பத்திரங்கள் முடிவடையும் நேரமும் திகதியும் |
|---|---|---|---|---|
| 1. | மன்னார் | மன்னார் | .. 2,000 .. | 11.6.69 மு.ப. 10.00 |
| 2. | மன்னார் | தலைமன்னார் | .. 1,500 .. | 11.6.69 மு.ப. 10.15 |
| 3. | மன்னார் | பேசாலை | .. 1,500 .. | 11.6.69 மு.ப. 10.30 |
| 4. | மன்னார் | உயிலங்குளம் | .. 1,500 .. | 11.6.69 மு.ப. 10.45 |
| 5. | மாந்தை | கட்டாடிவயல் | .. 500 .. | 11.6.69 மு.ப. 11.00 |
| 6. | முசலி .. | அரிப்பு | .. 1,000 .. | 11.6.69 மு.ப. 11.15 |
| 7. | மன்னார் | மாதுவாடி | .. 1,500 .. | 11.6.69 மு.ப. 11.30 |

ச. கதிர்காமநாதன்,
அரசாங்க அதிபர்,
மன்னார் மாவட்டம்.

மன்னார்க் கச்சேரி,
1969 ம் ஞு மே மீ 27 ந உ.

6–97—6.6.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,857

# ஏல விற்பனைகள்

## ஏல விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் நல்லூர் குறுக்கு வீதியில் நல்லூர் கந்தசாமி கோவிலுக்கு அருகாமையிலும் யாழ்ப்பாணம் ஸ்டேசனிலிருந்து பத்து நிமிட நடைத் தூரத்திலும் ஒரு புது மேல் மாடி வீடு.

தேசிய வீடமைப்புத் திணைக்கள உதவியாளர் தன்பாலா சிறிசேன வீரசிங்கா ஆகிய நான் கட்டளையிட்டு அதிகாரமும் அளித்தபடி கீழே விபரிக்கப்படும் ஆதனத்தை யாழ்ப்பாணம் குறுக்கு வீதியில் 20 ம் இலக்கத்தை உடைய "சந்திரபவன்" என்னும் இல்லத்தில் வசிக்கும் திருமதி எஸ். பாலச்சந்திரனும் திரு. பி. பாலச்சந்திரனும் 1955 ம் ஆண்டு மே மாதம் 1 ந் தேதியன்று யாழ்ப்பாணம் பிரசித்த நொத்தாரிஸ் திரு. வி. நவரத்தினராசாவால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 4653 ம் இலக்கத்தை உடைய ஈட்டு முறியின்படி திரும்பக் கட்டத் தவறிய ரூபா 49,359.42 சதமும் இதில் ரூபா 5,000 ம், 29.3.68 ல் இறுபட்டது நீக்கி மிகுதியும் ரூபா 34,500 க்கு 1967 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 31 ந் திகதி தொடக்கம் விற்பனை நாள் வரையும் 5 விகித வட்டியும் அல்லது முழுப் பணத்தையும் குறிப்பிட்ட ஈட்டு முறியின் பிரகாரம் அறவிடவேண்டிய அபராதத் தொகையையும் இக்கடன் தொகையை மீட்பதற்கு ஏற்பட்ட செலவுத் தொகையை அறவிடுவதற்காக மேலே சொல்லப்பட்ட தேசிய வீடமைப்புச் சட்டத்திற்கும் அதன் திருத்தங்களுக்கும் அமைவாக 1969 ம் ஆண்டு யூன் மாதம் 28 ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்குக் குறித்த காணியில் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### காணியின் விபரம்

பன்னிக்கன் வளவு, பண்டித முதலியார் வளவு, பின்கடி வளவு ஆகிய காணிகளில் வரி மதிப்பீட்டிலக்கம் 20 தை உடைய நாலாம் இலக்கத் துண்டுக் காணியும் அதில் கட்டப்பட்டுள்ள வீடும். வட மாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் நல்லூரிலே அமைந்துள்ள இக்காணியின் எல்லைகள் :—வடக்கு : இக்காணியின் மூன்றும் இலக்கத் துண்டு. கிழக்கு : ஒழுங்கை. தெற்கு : செல்லையா மனைவி சுந்தரலட்சுமி, செல்லப்பா கந்தையா ஆகியோர்களது ஆதனம். மேற்கு : வீதி. இதன் விஸ்தீரணம் உத்தரவு பெற்ற நில அளவையாளர் யோன் மனுவலினால் தயாரிக்கப்பட்டதும் டி 233/182 இலக்கத்தின் கீழ் யாழ்ப்பாண மாவட்டக் காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டதுமான 1954.8.23 ந் திகதிய 203 ஈ 1 ஆம் இலக்க நில அளவைப் படத்திற்கிணங்க 7 பரப்பும் (வி. சா.) ·06 குளிகளுமாகும்.

மேல்திக விபரங்களை அறிய விரும்புவோர் தேசிய வீடமைப்புத் திணைக்கள ஆணையாளரிடம் அவர் கந்தோரில் கொழும்பு 2, சேர் சிற்றம்பலம் கார்டினர் மாவத்தையில் அறியலாம்.

சி. சங்கரப்பிள்ளை,
ஏல விற்பனையாளர்.

தெல்லிப்பளை,
1969 ம் ஆடு மே மீ 20 ந் உ.

6–152—6.6.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,857

# நானாவித அறிவித்தல்கள்

## துணி அச்சடிக்கும் கைத்தொழில்

கிராமாபிவிருத்திச் சிறு கைத்தொழில் திணைக்களம் புதிதாகத் துணி அச்சடிக்கும் தொழிலாளருக்கு வெளிநாட்டு நாணயமாற்று ஒதுக்கீட்டினை வழங்க முடியாதிருக்கிறதென்பதை இத்தால் தெரிவித்துக் கொள்ளுகிறது. எனினும் இந்தத் திணைக்களத்தில் ஏற்கெனவே பதிந்துள்ள கைத்தொழிலாளர்களுக்கு தொடர்ந்து வெளிநாட்டு நாணய மாற்று ஒதுக்கீடு வழங்கப்படும்.

பி. எச். பி. டி சில்வா,
அதிபர்,
கிராமாபிவிருத்தி சிறு கைத்தொழில் திணைக்களம்.

கொழும்பு 7,
மே 27, 1969.

6–161—6.6.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,857

**அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய புதிய கிரய விகிதங்கள்**

**1.12.1968** தொடங்கி அமுலுக்கு வந்தது

## "இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசற்)"

**வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது**

1. *பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும்* **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.**

2. *தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன்* **அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு,** *அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.*

3. *போயா தினத்திற்கு முந்திய நாட்களில் மு. ப.* 9 *மணி முதல் பி. ப.* 1 *மணி வரையும் மற்றும் நாட்களில் மு. ப.* 9 *மணி முதல் பி. ப.* 4.30 *மணிவரையும் காரியாலய நேரமாகும்.*

4. *போயா தினத்திற்கு முந்திய நாட்களில் நண்பகல்* 12 *மணிக்கும், மற்றும் நாட்களில் பி ப.* 3.30 *மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.*

5. **சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும்.** *தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.*

6. **நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல், விசேஷமாக** *ரைப் அடித்தல் பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.*

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படுதல் வேண்டும்.**

8. *வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்* **கொள்ளப்படமாட்டா.**

9. *நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுபடவேண்டிய விளம்பரங்கள் "சுப்பிறீம் கோட் புறொக்றுரல்" கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.*

10. *அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள்* 1968 *ம் ஆண்டு திசெம்பர் மாதம்* 1 *ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—*

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய .. .. .. | 20 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி .. .. | 20 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் .. .. | 220 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் .. .. | 440 | 0 |

*ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.*

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும்.** *அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.*

12. **1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம்** *அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.*

13. *சந்தா விபரம்* 1.12.68 *ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.*

| **அரசாங்க வர்த்தமானி (வருடத்திற்கு)** | உள்ளூர் ரூ. ச. | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|
| ஒவ்வொரு பகுதியும் .. .. .. | 46 00 | 60 00 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு .. .. | 36 00 | 42 00 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் .. .. | 43 50 | 51 50 |

**ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.**

| **தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்** | விலை ரூ. ச. | தபாற் செலவு (உள்ளூர்) சதம் |
|---|---|---|
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் ஒவ்வொரு பகுதியும் .. .. | 0 50 | 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் ஒவ்வொரு பகுதியும் .. .. | 1 00 | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 30 | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 60 | 15 |

**இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத்தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி 500, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.**

### அட்டவணை—1969

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| சனவரி | .. | 3.1.69 | வெள்ளி | .. | 24.12.68 | செவ்வாய் | பி. ப. 3.30 |
| | | 9.1.69 | வியாழன் | .. | 3. 1.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | | 16.1.69 | வியாழன் | .. | 9. 1.69 | வியாழன் | ந. ப. 12.00 |
| | | 24.1.69 | வெள்ளி | .. | 16. 1.69 | வியாழன் | ந. ப. 12.00 |
| | | 31.1.69 | வெள்ளி | .. | 24. 1.69 | வெள்ளி | ந. ப. 12.00 |
| பெப்புருவரி | .. | 7.2.69 | வெள்ளி | .. | 31. 1.69 | வெள்ளி | ந. ப. 12.00 |
| | | 14.2.69 | வெள்ளி | .. | 7. 2.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | | 21.2.69 | வெள்ளி | .. | 14. 2.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | | 28.2.69 | வெள்ளி | .. | 20. 2.69 | வியாழன் | பி. ப. 3.30 |
| மார்ச் | .. | 7.3.69 | வெள்ளி | .. | 27. 2.69 | வியாழன் | பி. ப. 3.30 |
| | | 14.3.69 | வெள்ளி | .. | 7. 3.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | | 21.3.69 | வெள்ளி | .. | 14. 3.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | | 28.3.69 | வெள்ளி | .. | 21. 3.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| ஏப்பிறல் | .. | 3.4.69 | வியாழன் | .. | 27. 3.69 | வியாழன் | பி. ப. 3.30 |
| | | 11.4.69 | வெள்ளி | .. | 31. 3.69 | திங்கள் | பி. ப. 3.30 |
| | | 18.4.69 | வெள்ளி | .. | 8. 4.69 | செவ்வாய் | ந. ப. 12.00 |
| | | 25.4.69 | வெள்ளி | .. | 18. 4.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | | 30.4.69 | புதன் | .. | 23. 4.69 | வியாழன் | ந. ப. 12.00 |
| மே | .. | 9.5.69 | வெள்ளி | .. | 30. 4.69 | புதன் | பி. ப. 3.30 |
| | | 15.5.69 | வியாழன் | .. | 9. 5.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | | 22.5.69 | வியாழன் | .. | 15. 5.69 | வியாழன் | ந. ப. 12.00 |
| | | 30.5.69 | வெள்ளி | .. | 22. 5.69 | வியாழன் | ந. ப. 12.00 |
| யூன் | .. | 6.6.69 | வெள்ளி | .. | 30. 5.69 | வெள்ளி | ந. ப. 12.00 |
| | | 13.6.69 | வெள்ளி | .. | 6. 6.69 | வெள்ளி | ந. ப. 12.00 |
| | | 20.6.69 | வெள்ளி | .. | 13. 6.69 | வெள்ளி | ந. ப. 12.00 |
| | | 27.6.69 | வெள்ளி | .. | 20. 6.69 | வெள்ளி | பி. ப. 3.30 |

அரசாங்க அச்சகம், கொழும்பு,
1968 ம் ௵ டிசம்பர் ௴ 20 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
பதில் அரசாங்க அழுத்தகன்.

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது.